# *Volume - 5*

# தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து

**(The Feast of the true sayings of God)**

**இயேசுவோடே கூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவன் இவைகளைக் கேட்ட பொழுது, அவரை நோக்கி: தேவனுடைய ராஜ்யத்தில் போஜனம் பண்ணுகிறவன் பாக்கியவான் என்றான்.** Luk_14:15,

## THE SCRIPTURE FEAST MINISTRIES


**REV: PAUL BENJAMIN**

FOUNDER AND AUTHOR

**REGD OFFICE:**

NO:104, EXTN 7 , MAHA LAKSHMI NAGAR, NANDIVARAM, GUDUVANCHERY, KANCHIPURAM DIST CHENNAI 603 202 . TAMIL NADU, SOUTH INDIA .

Mobile : + 91 94456 35860

Email : info@scripturefeast.net, www: scripturefeast.net


**FOREWORD**

**PASTOR : A. THOMAS RAJ**

PRESIDENT, APOSTOLIC CHRISTIAN ASSEMBLY

# தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து

**(The Feast of the true sayings of God)**

1. பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையிலானவைகள்
2. பல ஆங்கில பதிப்பு வேதாகமத்துடன் ஒப்பிடக்கூடியவைகள்
3. தேவ நாமத்துடன் பல தேவ தரிசனங்கள் ஒருங்கிணைக்கப் பட்டவைகள்.
4. பெரிய மதங்களையும் அதன் உட்பிரிவுகளையும் உள்ளடக் கியவைகள்.
5. வேதத்தின் அடிப்படை உபதேசங்களை அஸ்திபாரமாகக் கொண்டவைகள்
6. மெய்யான தேவ ஞானத்தை எளிமையாக கற்றுக் கொள்ளும் வழி முறைகள்.
7. தேவனால் முன் குறிக்கப்பட்டவர்களுக்கு ஜெயங்கொள்ளு வதற்காக தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து.
8. வேதாகம மையக்கருத்துக்கள் அதன் இணையான தேவ வார்த்தைகளுடன் இரண்டறக் கலப்பவைகள்.




@ One among the 1000 generation
The Bride in 1000 years kingdom

# பொருளடக்கம்

## தலைப்பு ஐந்து

## ஆவி, ஆத்துமாவின், மறுபிறப்பும் சரீரத்தின் உயிர்தெழுதலும்


1. மதிப்புரை / Foreword

2. முன்னுரை

3. ஆசிரியர் உரை

4. மனிதனுடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தின் மரணம்

5. கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளினால் மனிதனுடைய ஆத்துமாவில் மறுபிறப்பு

6. கிறிஸ்துவின் ஆவியினால் மனிதனுடைய ஆவியில் மறுபிறப்பு

7. ஆவி, ஆத்துமாவில் மறுபடியும் பிறந்தவர்களுக்கு களங்கமில்லாத ஞானப்பால்

8. களங்கமில்லாத ஞானப்பாலை பூரணமாக குடித்தவர்களுக்கு பலமான ஆகாரம்

9. மனிதனுடைய ஆவி, ஆத்துமாவில் தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுக்கிற தேவ சித்தத்தை நிறைவேற்றுதல்

10. மனிதனுடைய ஜென்ம சரீரத்தின் மரணமும் ஆவிக்குரிய சரீரத்தின் உயிர்தெழுதலும்

12. மனிதனுடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தின் முதலாம் உயிர்தெழுதலும், இரண்டாம் உயிர்தெழுதலும்

13 முடிவுரை

# மதிப்புரை / Foreword

*JESUS NEVER FAILS*

*"TO MAKE READY A PEOPLE PREPARED FOR THE LORD"*


## APOSTOLIC CHRISTIAN ASSEMBLY

'Speak evil no man (Titus 3:2)' (Regd.No. 80 of 1957) 'Follow peace with all men (Heb. 12.14)'

**Founder : Pastor G. SUNDRAM** **Chief Pastor : M.K.SAM SUNDARAM**

| | | |
|---|---|---|
| **Pastor . A. THOMASRAJ** | **G.SUKUMAR SAMUEL** | **K.R. SELWIN** |
| President | Hon.secretary | Treasurer |


*The grass withers, the flower fades,*
*But the word of our God stands forever. " Isa. 40:8*

The Word of God is blameless, faultless, without defect, deserving no censure. And the Word of God has to be Preached to all People. All over the Earth with conviction and clarity for the edification of the hearers.

Careful study and meditation of the Scriptures when undertaken with the grace of God depending on the Holy Spirit's guidance will bring hidden truths to light.

The work and efforts of Bro. Paul Benjamin in this regard is commendable. I appreciate his passionate toil in the Lord's Kingdom. My prayers are that his teaching and writing will profit and prepare many for the coming of our Lord and savior Jesus Christ. Amen.

Pastor A. Thomasraj

President

Apostolic Christian Assembly


No. 26. Shanmugarayan Street, Purasawalkam, Chennai – 600 007. ☎ : 26622775/ 26635583

Email :- info@acapryaerhouse.org, Web site : www. acaprayerhouse.org

# முன்னுரை

மனிதன் மாம்ச சரீரத்தில் வாழ்வதற்கு அவனுக்கு காற்று, தண்ணீர், போஜனம், வஸ்திரம், குடியிருப்பு எப்படி ஒவ்வொருவருக் கும் அடிப்படை முக்கியமான தேவைகளோ; அது போலவே ஆவிக் குரிய மனிதன் வாழ்வதற்கு இந்த ஐந்து அடிப்படை தேவைகள் ஆவிக்குரிய நிலையில் தேவனுடைய வார்த்தைகளின் மூலம் மிக முக்கியமானது. இவைகளை உள்ளான ஆவிக்குரிய மனிதனின் ஐந்து ஆவிக்குரிய அடிப்படை தேவைகளை; புறம்பான மனிதனின் ஐந்து அடிப்படை தேவைகளோடு ஒப்பிட்டு கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

| மாம்ச சரீரத்தின் தேவைகள் | | ஆவிக்குரிய சரீரத்தின் தேவைகள் |
|---|---|---|
| ஜீவ சுவாசம் | 1 | பரிசுத்த ஆவி |
| தண்ணீர் | 2 | நித்திய ஜீவத்தண்ணீர் |
| போஜனம் | 3 | நித்திய ஜீவ வார்த்தைகளின் போஜனம் |
| வஸ்திரம் | 4 | நீதியின் வஸ்திரம் |
| குடியிருப்பு | 5 | பரலோக வாசஸ்தலம் |

இவைகளை உட்கொள்ளும் அளவு அவரவர் தன்மைக் கேற்றபடி மாறுபடுகிறது. இந்த ஐந்து தேவைகள் குறையும்போதோ, அல்லது தேவைப்படும் போதோ, சரீரமானது இவைகளை பூர்த்தி செய்ய முயற்சி செய்து போராடுகிறது. எப்படி மாம்ச சரீரம் தன்னு டைய தேவைகளை பூர்த்தி செய்ய முயற்சி செய்து போராடுகிறதோ, அது போலவே ஆவிக்குரிய சரீரமும் இவைகளை ஆவிக்குரிய நிலை யில் அவரவர் தன்மைக்கேற்றபடி பூர்த்தி செய்ய முயற்சி செய்து போராடுகிறது.

மனச்சாட்சியை தேவன் மனிதனுக்கு கொடுத்து அதன் மூலம் எப்பொழுது வேண்டுமானாலும் அவன் தேவனுடன் ஆவியில் தொடர்பு கொண்டு தன்னுடைய ஆத்துமாவின் தேவைகளை பூர்த்தி

செய்து கொள்ளலாம், மேலும் இவைகளுக்காக மனச்சாட்சியில் அறிவு, புத்தி, ஞானம் இவைகளை தேவன் மனிதனுக்கு அளவில்லாமல் கொடுத்திருக்கிறார். ஒருவன் தன் ஆத்துமாவின் தேவைகளை சந்திக்கும்படி நீண்ட தூரம் பயணம் செய்யவோ அல்லது மிக கடினமாக வேலை செய்யவோ தேவையில்லை. Rom_2:11-16

ஆத்துமாக்களின் பிதாவாகிய தேவன் மனிதனுக்கு மிக அருகிலும் மிக எளிமையாகவும் தன் ஆத்துமாவின் தேவைகளை சந்திக்கும்படி தேவ வார்த்தைகளை தேவன் நமது இருதயத்திற்கும் வாய்க்கும் சமீபமாக வைத்திருக்கிறார். Rom_10:5-10, Deu_30:11-14, Jer_23:23-24, Act_17:24-28,Rom_1:19-20

மனச்சாட்சியில் தேவனுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்வது பொதுவான இரட்சிப்பு, மேலும் இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளுடன் உடன்படிக்கை செய்து இரட்சிப்பை ஏற்றுக்கொள்வது விசேஷ இரட்சிப்பு. 2Pe_1:1, Jud_1:3, Eph_1:1, 1Pe_1:1, Tit_1:1,

**விசேஷ இரட்சிப்பின் ஆவிக்குரிய நிலமைகள்**

1. ஜலத்தினால் மறுபடியும் பிறப்பு :-

தேவனுடைய வார்த்தைகளினால் மனம் மறுரூபம் அடைந்து தேவனுடைய இராஜ்ஜியத்தை விசுவாசக் கண்களால் பார்ப்பது. Joh_3:3

2. ஆவியினால் மறுபடியும் பிறப்பு :-

தேவனுடைய வார்த்தைகளினாலும் பரிசுத்த ஆவியினாலும் மனம் மறுரூபம் அடைந்து தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள்ளே விசுவாசக் கண்களால் பிரவேசிப்பது. Joh_3:5,

3. மறுபடியும் பிறந்தவர்களுக்கு களங்கமில்லாத ஞானப்பால்:- 1Pe_2:2-3, மறுபடியும் பிறந்தவர்கள் ஆவிக்குரிய காரியங்களில் வளர்ச்சியடைய கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்கள்.

4. பலமான ஆகாரம் :- Heb_5:12-14, தீமையை வெறுத்து, நன்மையை அறிந்து கொள்ளும் அறிவில் பூரண வளர்ச்சியடைந்து நீதியின் வசனத்தை பகுத்தறியும் ஞானத்தை அடைதல்.

5. பரலோக இராஜ்ஜியத்தின் இரகசியங்கள் :- Mat_13:10-15, உவமைகளின் இரகசியங்களை அறிந்து கொள்ளுவதினால் தேவனுடைய இராஜ்ஜியத்தில் தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுக்கிற தேவ சித் தத்தை / பங்களிப்பை அறிந்து கொள்ளுதல்.

6. தங்களுடைய விசுவாச உடன்படிக்கையில் நிலைத்திருந்து முன்னேறும் போது அவர்கள் பரலோக இராஜ்ஜியத்தில் தேவனுடைய சித்தத்தையும் அதன் விசுவாச அளவுப் பிரமாணத்தையும் அறிந்து கொண்டு தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுதல் Rev_3:20-22

7. ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்து :- Rev_19:1-9 இயேசு கிறிஸ்து, இராஜாவாக முடிசூடப்படும் பட்டாபிஷேக விழாவில் கலந்து கொண்டு தேவனுடைய சத்தியமான வசனங்களை விருந்தாக புசித்து, தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஆட்சியின் பதவியை பரிசாகப்பெற்று, அல்லேலூயா என்று கெம்பீர சத்தத்தோடு ஆரவாரம் செய்து தேவனை மகிமைப்படுத்துதல்.

8. மரணத்தை ஜெயமாக விழுங்குதல் :- 1Co_15:50-54, 1Co_11:23-30, Joh_6:27-28 தேவனுடைய சத்தியமான நித்திய ஜீவ வசனங்களின் அறிவில் மறு ரூபமடைந்து அதன் கிரியைகளின் மூலம் அழிவுள்ளது அழியாமை யையும் சாவுள்ளது சாவாமையும் தரித்துக் கொள்ளும் போது மரணம் ஜெயமாக விழுங்கப்படும்.
பொதுவான இரட்சிப்பும் மற்றும் விசேஷ இரட்சிப்பின் வளர்ச்சிப் படிகளும் மிக எளிமையான முறையில் தேவனுடைய சத்தியமான வசனங்களைக் கொண்டு புரிந்து கொள்ளும் அளவிற்கு விவரிக்கப்பட்டுள்ளது. தேவனுடைய கிருபையினால் இந்த தேவனுடைய சத்தியமான வசனங்களின் விருந்தை பல ஆங்கில மொழிப் பதிப்பு வேதாகமங்களுடனும் மற்றும் அவரவர்

சொந்த தாய்மொழி வேதாகமங்களுடனும் ஒப்பிட்டுப் பார்த்து உணர்ந்து கொள்ளும் அளவிற்கு விவரிக்கப்பட்டுள்ளது. இந்த தீர்க்க தரிசன வசனங்களின்படி ஜலத்தினால் சமுத்திரம் நிறைந்திருப்பது போல பூமி கர்த்தரைக் குறித்து அறிகிற அறிவால் நிறைந்திருக்கும் என கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன். Hab_2:14, Isa_11:9

இந்த தீர்க்க தரிசன வசனத்தின் படி இந்த வசனங்களை வாசிக்கிறவன், கேட்கிறவன் இதில் எழுதியுள்ளவற்றை கைக்கொள்கிறவன் பாக்கியவான். இந்த தீர்க்க தரிசன வசனத்தின்படி ஏற்கனவே உங் களுக்கு அறிவிக்கப்பட்ட தேவனுடைய சத்தியமான வசனங்களைக் கொண்டே மீண்டும் இவைகள் இப்பொழுது; பத்து தேவனுடைய வார்த்தைகளின் தலைப்புக்களின் மூலம் விவரிக்கப்பட்டு, உங்களுக்கு அறிவிக் கப்பட்டு வருகிறது. Rev_1:3. 1Pe_1:10-13

இந்த தீர்க்கதரிசன வசனத்தின்படி பொதுவான இரட்சிப்பைக் குறித்து கருத்தாய் எழுதும்போது, பரிசுத்தவான்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தைக்குறித்து எழுதுவது நலமாக கண்டது இந்த தீர்க்க தரிசன வசனத்தின்படி தங்களது பெயர் பூமியில் எழுதப்படாமலும், ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்ட பெயர் அழிக்கப்படாமலும், ஞாபக புஸ்தகத்தில் பெயர் எழுதப்படும் படியாகவும் இவைகளை மீண்டும் ஞாபகப் படுத்திக்கொள்வோம் ஆமென்.
Jud_1:3, Jer_17:13,Exo_32:33, Psa_69:28, Mal_3:16,

# ஆசிரியர் உரை

மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் இராஜாவாக வெளிப் படப்போகிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு எங்களின் அன்பின் வாழ்த்துக்கள்.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மேல் உள்ள விசுவாசத்தில் தங்களுடைய முழு நம்பிக்கையையும் வைத்து, அவருடன் விசுவாச உடன்படிக்கை செய்து, அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களையும் இரட்சகராகிய இயேசுகிறிஸ்து அவர் இராஜாவாக முடிசூட்டப்படும் தன்னுடைய பட்டாபிஷேக விழாவிற்கு அழைத்து அவர்களுக்கு தேவனுடைய சத்தியமான வார்த்தைகளை விருந்தாகக் கொடுத்து, அவர்களின் கிரியை களின்படி பிரதிபலனை பரிசாக அளிக்கிறார்.

இந்த நற்செய்தியை தேவனுடைய தரிசனமாகவும், அழைப் பிதழாகவும் எழுதி அனுப்பி இதன் பயனாக தேவனால் முன் குறிக் கப்பட்ட பரிசுத்தவான்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு உத்தமமான ஜனத்தை கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும் ஊழியத்தை செய்கிறவர்களாக, இந்த தலைமுறையில் எழும்பும்படி நாங்கள் தரிசனம் நிறைவேற ஜெபத்துடன் ஊழியம் செய்து கொண்டு வருகிறோம். தேவ வார்த்தைகளை கண்டு, கேட்டு, உணர்ந்து கொண்டபடியால்; தேவன் எனக்கு பகிர்ந்த விசுவாச அளவின்படி தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக மனம் புதிதாகிற தினாலே ஆவியில் மறுரூபம் அடைந்து தேவ தரிசனத்தைப் பெற்றேன்.

**தரிசனம் :-** கர்த்தர் எனக்கு பிரதியுத்திரமாக : நீ தரிசனத்தை எழுதி, அதை கடந்தோடுகிறவன் வாசிக்கும்படி பலகையிலே தீர்க்க மாக வரை.

**எழுத்தின்படி பொருள் :-** காகிதம், தோல்சுருள், கற்பலகை உலோகத்தினாலான பலகை இவைகளில் தேவ தரிசரினத்தை எழுதி அறிவிப்பது.

**ஆவியின்படி பொருள் :-** தேவ வார்த்தைகளை வாசிப்பது, கேட்பது, ஆலோசனையாக ஏற்றுக்கொள்வது, விசேஷ பயிற்சிகளி னால் உணர்ந்து கொள்ளுவது ஆகியவற்றின் மூலம் சதையாகிய இருதயப்பலகையின் மேல் தேவ தரிசனத்தை எழுதி அறிவிப்பது.

**ஞான அர்த்தத்தின்படி பொருள் :-** கணினியின் கடந்தோடு கிற திரையில் தரிசனத்தை வாசிக்கும்படி கணினியின் விசைப்பலகை யிலே தரிசனத்தை எழுதி அறிவிப்பது.

தரிசனத்தை மிக சுருக்கமாகவும், வெளிப்படையாகவும், வேதத்தில் உள்ளபடி அவரவர் கேட்டறியும் அளவிற்கேற்றபடி எழுதி, அவைகளை எழுத்தின்படி, ஆவியின் படி, ஞான அர்த்தத்தின்படி ஆகிய மூன்று வழிகளிலும் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்தில் பங்கடையும்படி அழைப் பிதழ்களை அனுப்பும் இந்த ஊழியத்திற்காக தேவைகள் அநேகம் உண்டு.

இப்படிப்பட்ட பல கிருபை வரங்கள், ஊழியதரிசனங்கள் மற்றும் பல ஆசீர்வாதங்கள், தேவனுடைய சித்தத்தின்படி கிறிஸ்து வின் அவயவங்களான நமக்கு தேவ ஆவியானவர் பகிர்ந்து கொடுத் திருக்கிறார்.

கிறிஸ்துவாகிய தலையைப் பற்றிக்கொண்டு கிறிஸ்துவின் அவயவமான எங்கள் ஊழியம் அதன் முழு பெலத்துடன் பொரு ளாதார ஆசீர்வாதங்களை பெற்று செயல்பட முயற்சி செய்து பாடு பட்டுக் கொண்டிருக்கிறது. மற்ற கிறிஸ்துவின் அவயவங்களான நீங்களும் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர் போல எங்களுக்கு உதவி செய்யும்படி வேண்டிக் கொள்கிறோம்.

தேவன் பகிர்ந்து கொடுத்த சித்தத்தை நிறைவேற்றும்படி கிறிஸ்துவின் அவயங்களை இசைவாகக்கூட்டி இணைக்கப்பட்டு ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவிற்குத்தக்கதாக கிரியைகளை செய்யும் போது; அது அன்பினாலே தனக்கு பக்தி விருத்தி உண்டாகுவதற்கேதுவான முழு சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது. இப்படி ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றி தேவ ஆசீர்வாதங்களை சுதந்தரிப்போம்.

அல்லேலூயா, ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
உங்கள் சகோதரன்

# ஆவி, ஆத்துமாவின், மறுபிறப்பும் சரீரத்தின் உயிர்தெழுதலும்

## 1-0 மனிதனுடைய ஆவி ஆத்துமா, சரீரத்தின் மரணம்.

1-1 மனிதனுடைய மனசாட்சிப்பிரமாணதின் நன்மை தீமைகள் அவன் இருதயத்தில் உயிர் அடைய வேண்டும், அல்லது கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை தன்னுடைய ஆவி ஆத்துமாவில், ஏற்றுக் கொள்ள வேண்டும்; அப்பொழுது தன்னுடைய ஆவி ஆத்துமா, சரீரத்தின் மரணத்தை அறிந்து உணர்ந்து கொள்ள முடியும்.Rom_5:12-14 , Rom_7:7-10, Rom_2:14-16, Eph_2:1-5,

1-2 மனிதனுடைய மனசாட்சிப்பிரமாணதின் நன்மை தீமைகள் அவன் இருதயத்தில் உயிர் அடையாமல் இருக்கும்பொழுது அல்லது கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை தன்னுடைய ஆவி, ஆத்துமாவில் அறிந்து உணர்ந்து கொள்ளாமல் இருக்கும்பொழுது அவன் தன்னுடைய ஆவி, ஆத்துமா சரீரத்தின் மரணத்தை அறிந்து உணர்ந்து கொள்ளாமல்; ஆதாம் முதல் இந்தக்காலம் வரை பாவம் செய்யாதவர்களையும் தொடர்ந்து ஆளுகை செய்து கொண்டு வரும் மரணத்திலே நிலைத்திருக்கிறான்.

1-3 செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல் / ஆவி, ஆத்துமாவில் பாவத்தின் மூலம் மரணத்தை உண்டாக்கும் கிரியை களிலிருந்து மனந்திரும்புதல் Heb_6:1-2, 1Co_15:26, 1Co_15:54, 2Co_5:1-5, Jam_1:15, Isa_59:4, Ecc_7:25-26, Joh_5:24, Joh_8:51, Heb_9:14, Psa_115:17-18, Rom_8:2, Pro_14:27, Psa_33:18, Psa_68:20, Hos_13:14,

1-4 பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம் எனவே விலகியிருக்க வேண்டிய முதல் சத்துருவும் மரணம். எப்படி எழுத்தின்படி சரீர மரணத்தை உண்டாக்கும் பல காரியங்களை அறிந்து கொண்டு தன்னுடைய மனதை திருப்பி சரீர மரணம் உண்டாகாமல் காத்துக்கொள்ளுகிறோமோ அதுபோல; ஆவி ஆத்துமாவில், பாவத்தின் மூலம் மரணத்தை உண்டாக்கும் காரியங்களின் கிரியைகளை அறிந்து கொண்டு, தன்னுடைய ஆவி ஆத்துமாவை பாவத்திலிருந்து மனதை திருப்பி, ஆவி ஆத்துமாவில் மரணம் உண்டாகாமல் காத்துக்கொள்ள வேண்டும்; இவைகளை அறியாமல் இருந்தால் அறியாமையே ஒரு பாவமாக கருதப்படும், இது ஆவி ஆத்துமாவில் தொடர்ந்து மரணத்தை ஏற்படுத்திக் கொண்டே இருக்கும்.

1-5 இந்த பூமியில் ஒருவன் தன் சரீரம் உயிரோடிருக்கும் நாள் வரை, அவன் ஆவி ஆத்துமா பாவத்தின் மூலம் மரணத்தை உண்டாக்கும் காரியங்களை அறியாமல் சிக்கிக்கொண்டு, அவன் ஆவி, ஆத்துமா மரணத்தை ருசிபார்க்கும்போது / சந்திக்கும்போது; அவன் மீண்டும் ஆவி, ஆத்துமாவில் பிழைத்து ஜீவனோடிருக்கும் படி கிறிஸ்துவின் ஜீவனுடைய ஆவியின் பிராமணத்தினால் தேவ னுடைய நித்திய ஜீவ வார்த்தைகள் இலவசமாக கொடுக் கப்பட்டுள்ளது. அவைகளை ஏற்றுக்கொண்டு மீண்டும் ஆவி, ஆத்து மாவில் பிழைக்கவே பிழைக்கலாம். ஒருவன் மீண்டும் ஆவி, ஆத்துமாவில் பாவத்தின் மூலம் உண்டாகும் மரணத்தை தவிர்க்க / சந்திக்காமல் இருக்கும்படி இவைகளை பற்றின எல்லா காரியங்களின் கிரியைகளையும் தேவ வசனத்தின் மூலம் அறிந்து கொள்ள வேண்டும்.

1-6 ஒருவன் தன்னுடைய ஆவி, ஆத்துமா மரணத்தை சந்தித்த பின்பு, தேவனுடைய நித்திய ஜீவ வார்த்தைகளை அறியாமல் இருக்கும்போதோ, அல்லது அவைகளை ஏற்றுக்கொள்ள மறுக்கும் போதோ, அவர்களின் இந்த நிலை அவர்களின் சரீர மரணத்தை தூண்டி விட்டு நாளடைவில் தாங்களாகவே சரீர மரணத்தை தேடிக்கொள்ளுவார்கள் அல்லது பாவத்தின் சம்பளமாகிய மரணம் அவர்களை சந்திக்கும்.

### *1-7 ஆவி, ஆத்துமாவில் மரணத்தை உண்டாக்கும் கிரியைகள் ஏற்படக் மூலக் காரணமானவைகள்*

1. ஜென்ம பாவத்தினால் ஆவி, ஆத்துமாவில் மரணம் Joh_5:24, Joh_8:51, Rom_1:28-32, Rom_6:13-16, Rom_6:23, Jam_1:15, Gal_5:17-26,

2-1 தேவனுக்கு விரோதமான கரும பாவத்தினால் ஆவி, ஆத்துமாவில் மரணம் 1Sa_2:25, Luk_12:10, Luk_15:21, Gen_39:9, 1Jo_5:16-17, Lev_10:1-11, 2Ch_26:16, 2Sa_24:1-10,

2-2 மனிதனுக்கு விரோதமான கரும பாவத்தினால் ஆவி, ஆத்துமாவில் மரணம் Rom_5:12-14, Rom_6:20-23, Mat_23:23-28, Luk_11:39-44 , Eze_18:9-13, 2Ti_2:19-21, Eze_33:1-9,

3. நியாயப்பிரமாண நீதியின் மூலம் நீதியின் பிரமாணத்தை அடைய முயற்சி செய்வதால் ஆவி, ஆத்துமாவில் மரணம் Gen_2:16-17, Rom_7:8-13, Rom_9:29-32, Gal_3:10-12, Gal_3:2-5, Gal_2:16, Gal_5:4, (Rom_3:27-28 ) Phi_3:9, Rom_3:20-21, 1Ti_1:8-11, Gal_6:12-13, Rom_2:27-29, 1Ti_1:5-7, Rom_8:13, Luk_24:5-6, Mat_22:29-33, Luk_20:37-38, Isa_8:19, 2Jo_1:7-10, Rom_10:1-10, Deu_30:11-14, 1Jo_4:1-6,

4. இயேசு கிறிஸ்துவின் மூலம் வெளிப்பட்ட பொருளை பின்பற்றாமல் மீண்டும் நியாயப்பிரமாணத்தின் நிழலாட்டமான வைகளையே தொடர்ந்து பின்பற்றுவதால் ஆவி, ஆத்துமாவில் மரணம் Rom_7:1-6, 1Co_5:1-9, Amo_2:7, Gal_2:18-19, Deu_18:19-22, Job_5:1, Rom_8:10-12, Gal_3:10-13, Gal_4:20-31, Gal_5:1-10,

5. நிழலாட்டமானவைகளையே பொருளாக விசுவாசித்து அவைகளை பின்பற்றுவதால் ஆவி, ஆத்துமாவில் மரணம் Mat_23:13-28, Mat_15:1-9, Mar_7:1-13, Heb_9:8-10, Heb_13:8-10, 1Co_11:24-34, 1Ti_6:3-4, Rom_2:23-29, Col_2:11-23, Heb_10:1,

6. நிழலாட்டமானவைகளை தாங்களாகவே பொருளுக்கு மாற்றிக்கொண்டு அவைகளை பின்பற்றுவதால் ஆவி, ஆத்துமாவில் மரணம் 1Co_11:23-30, 1Ti_4:1-6, Col_2:16-23, Zep_1:7-10, Luk_4:1-12, Isa_17:10-13, Mat_15:1-20, Isa_66:17, Isa_65:3-5, Amo_6:13, Psa_2:1-12, Amo_7:17, Heb_13:10, Hab_2:3-6, Isa_41:21-24,

7. தேவனுடைய நியாயத்தீர்ப்பினால் முதலாம் மரணம் :-

சரீரத்தில் தேவனுடைய ரூபமும் சாயலும் இழந்தவர்களாக ஆவி, ஆத்துமா சரீரம், அக்கினி நரகத்திலிருந்து விடுதலையாக்கப்படுதல். 1Co_5:1-5, Psa_49:14, Job_14:20, Job_18:14, 1Co_15:35-44, 1Pe_4:5-6, Dan_12:1-3, Joh_5:25-29, Rth_2:20, Jam_2:13, Rev_20:11-15, Rev_20:5-6,

8. தேவனுடைய நியாயத்தீர்ப்பினால் இரண்டாம் மரணம் :- ஆவி, ஆத்துமா சரீரம், தேவனுடைய ரூபத்துடனும் சாயலுடனும் அக்கினி நரகத்தில் தள்ளப்படுதல். Rev_2:11, Rev_20:11-15, Act_10:42, Rom_14:9, 2Ti_4:1

**1-8 ஆவி, ஆத்துமாவில் மரணம் உண்டாவதற்கு காரண மான கிரியைகளிலிருந்து மனந்திரும்பும் வழிமுறைகள் :-**

1 கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிக்கை செய்து ஆவி ஆத்துமாவில் நல் மனம் பொருந்தி மனந்திரும்புதல் Deu_30:11-14, Rom_10:1-10, 2Jo_1:7-10, 1Jo_4:1-6, Psa_110:3, Mic_5:7, Mat_5:21-26, Job_22:21-30, Job_28:12-14, Job_28:20-22, Rom_8:10-18, Eph_5:26, Jam_1:17-18, 1Pe_1:4, 1Pe_1:23, Deu_32:2 Hos_6:1-3, Psa_72:6, Job_14:14, Job_26:1-5Act_10:42, Rom_14:9, 2Ti_4:1

2 சத்திய வசனங்களுக்கு நல் மனம் பொருந்தாதவர்களை தேவன் கடிந்து கொண்டு சிட்சித்து மனந்திரும்புதல். Rom_8:28-33, Joh_3:27, Deu_8:5-6, 1Co_11:32, Job_5:17, Pro_3:11-12, Heb_12:5-

13, Rev_3:19, Luk_20:18, Eph_1:8-12, 1Th_1:1-10, Tit_1:3-4, 1Pe_2:6-9, 2Ti_2:9-13, Mat_21:44,

3 மனம் திரும்பியவர்கள் நித்திய ஜீவ விசுவாசத்திலிருந்து வழி விலகி, ஆவி ஆத்துமாவில் மரிக்கும்போது; மீண்டும் அவர்கள் மனந்திரும்பும்படி தேவன் வாய்ப்பு கொடுப்பது. Eze_33:1-20, Eze_37:1-14, Joh_5:27-47, Dan_12:1-3, Job_22:21-30, Job_14:7-9, Rom_11:12-16, Rom_11:23-36, Dan_4:1-37, Dan_5:18-21,

**1-9 இரண்டாவது முறை ஆவி, ஆத்துமாவில் மரணம் உண்டாவதற்கு காரணமான செயல்கள்:-** Mat_23:25-28, Mat_15:18-20, Gal_5:17-21, Rom_7:4-11, 2Ti_3:1-7, Jam_1:15, Jam_2:10,

1 கிறிஸ்து பாவத்தை ஆக்கினைத்தீர்ப்பு செய்யும் வழிமுறைகளை பின்பற்றி மரணம் உண்டாவதற்கு காரணமான கிரியைகளிலிருந்து நீங்கலாகி ஆவி, ஆத்துமாவில் நல்மனம் பொருந்தாமல் இருப்பது Rom_8:1-7, 1Pe_3:18, Eph_2:6-22, Heb_10:1-39,

2 கீழ்ப்படியாமல் போன ஆவிகளுக்கு கிறிஸ்து சுவிசேஷம் அறிவிக்கும் முறையைப் பின்பற்றி மரணம் உண்டாவதற்கு காரணமான கிரியைகளிலிருந்து நீங்கலாகி ஆவி, ஆத்துமாவில் நல்மனம் பொருந்தாமல் இருப்பது 1Pe_3:18-21, 1Pe_4:5-6, Eph_4:7-16, Psa_68:18-20,

3 அடிமைக்கு எஜமானே சுவிசேஷம் அறிவிக்கும் முறையைப் பின்பற்றி மரணம் உண்டாவதற்கு காரணமான கிரியைகளிலிருந்து நீங்கலாகி ஆவி, ஆத்துமாவில் நல்மனம் பொருந்தாமல் இருப்பது Gal_4:29-30, 1Co_3:1-3, Gal_4:3-8, Rom_6:16, 2Pe_2:19, Joh_8:34, Gal_4:6-7, Rom_8:5-17, Gal_4:19-31, Gal_5:16-17, Pro_29:19-21, Pro_30:22-23, Isa_3:12, Pro_19:10,

4 தேவ வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாதவர்கள், நீதிமான்களின் ஞானத்தை பின்பற்றி மரணம் உண்டாவதற்கு காரணமான கிரியைகளிலிருந்து நீங்கலாகி ஆவி, ஆத்துமாவில்

நல்மனம் பொருந்தாமல் இருப்பது. Eph_2:1-2, Eph_6:12, Eph_2:3-10, Tit_3:3-8, Rom_8:5-17, Col_3:1-10, Mat_5:29-30, Rom_6:19, Psa_49:14, Job_21:19-22, 2Ti_3:1-7, Rom_7:4-11, Jam_1:15, Rom_5:17-21, 1Co_9:24-27, 2Co_10:4-6

5 மாம்ச திரையின் வழியாக ஜீவ மார்க்கத்திற்கு செல்லும் கிறிஸ்துவின் முறையைப்பின்பற்றி மரணம் உண்டாவதற்கு காரணமான கிரியைகளிலிருந்து நீங்கலாகி ஆவி, ஆத்துமாவில் நல்மனம் பொருந்தாமல் இருப்பது. Heb_9:1-28, Heb_10:1-23, 2Co_5:1-4, 2Pe_1:13, Heb_13:9-13, 1Pe_4:16,

6 தேவ வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாதவர்கள் போதனையில்லாமல் நற்கிரியைகள் மூலம் மரணம் உண்டாவதற்கு காரணமான கிரியைகளிலிருந்து நீங்கலாகி ஆவி, ஆத்துமாவில் நல்மனம் பொருந்தாமல் இருப்பது. 1Pe_3:1-2, 1Pe_4:16,

7 கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை பின்பற்றி மரணம் உண்டாவதற்கு காரணமான கிரியைகளிலிருந்து நீங்கலாகி மனந்திரும்பாமல், ஸ்திரீயாகிய சபையின் உபசேதத்தின்படி மனந் திரும்புகிறவர்கள் தேவனுக்கு முன்பாக நீதிமானாக இருப்பது எப்படி? Job_15:1-35, Job_25:4, Job_39:1-8, Pro_1:10-19, Pro_2:1-22, Pro_5:1-23, Pro_6:23-35, Pro_7:1-27, Pro_9:13-18, Isa_4:1, Isa_3:12, Rev_18:1-24, Job_15:14,

8 இரண்டாவது முறை ஆவி, ஆத்துமாவில் மரணம் உண்டாவதற்கு காரணமான கிரியைகளிலிருந்து மனந்திரும்பாமல் போனவர்கள் Jud_1:1-25, 2Pe_2:1-22, 2Pe_1:4-9, Heb_6:4-9

## 2-0 கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளினால் மனிதனுடைய ஆத்துமாவில் மறுபிறப்பு :-

யோர்தான் தண்ணீரினால் ஞானஸ்தானம் / கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளினால் தன்னுடைய ஆத்துமாவில் மறுபடியும் பிறந்து ; தேவனுடைய இராஜ்ஜியத்தினுடைய தரிசனங்களை காண்பது

பாவத்திலிருந்து மனம் திரும்பியவர்கள் நித்திய ஜீவ வார்த்தைகளினால் ஞானஸ்தானம் பெற்று தங்கள் ஞானத்தை சுத்திகரித்துக்கொள்ளுதல் / தேவனுடைய இராஜ்ஜியம் இதோ இங்கே இருக்கிறது, அதோ அங்கே இருக்கிறது என்று நம்பி, யாரையும் பின்பற்ற வேண்டாம் அல்லது எந்த இடத்திற்கும் ஓட வேண்டாம், நீங்கள் நித்திய ஜீவ வார்த்தைகளால் ஞானஸ்தானம் பெற்றுக்கொள்ளும்போது நீங்கள் இருக்கிற இடத்திலிருந்தே தேவனுடைய இராஜ்ஜியத்தை உங்கள் ஆவிக்குரிய கண்களால் வெகுதூரத்திலிருந்து உங்களால் பார்க்க முடியும். Mar_9:1, Luk_9:24-27,Joh_3:3, Luk_17:20-23,Tit_3:5, 1Pe_1:23,1Pe_3:21,

நித்திய ஜீவ வார்த்தைகள் நித்திய காலமாக இருப்பதால் அவைகளுக்கு குறிப்பிட்ட கால அளவுகள் வரையறுக்கப்படவில்லை, ஆனால் ஒருவர் நித்திய ஜீவ வார்த்தைகளின் மூலம் ஞானஸ்தானம் பெற்று அவைகளுடன் உடன்படிக்கை செய்து கொள்ளும்போது, நித்திய ஜீவ வார்த்தைகளின் கால அளவுகளை அவனுடைய கிரியைகளின் மூலம் ஆரம்பிக்கப்பட்டு தேவனுடைய வார்த்தைகளை நிறைவேறுவதற்கு தேவையான கால அளவுகளை எடுத்துக்கொள்ளுகிறது./ உடன் படிக்கை செய்து கொண்டவரின் கிரியைகள் மூலம் நித்திய ஜீவ வார்த்தைகளின் சுவையும் வெளிப்படுகிறது. Mat_16:15-19, Joh_6:65-69, Joh_1:1-5, Isa_51:1, 1Ki_5:17, 1Ki_6:7, 1Pe_1:4, 1Pe_1:23, 1Jo_1:1-4, Act_5:19-20, Pro_5:3-7, Jer_2:13, Phi_2:14-16, Jer_23:28-29,

2-1 ஜலத்தினால். ஞானஸ்தானம் :-

கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளின் ஆலோசனைகள். Isa_11:9, Hab_2:14, Isa_5:13, Hos_4:6, Hos_6:1-3,

2-2 ஜலத்தினால். ஞானஸ்தானம் கொடுப்பவர்கள் :-

கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளின் மூலம் தேவனுடைய ஆலோசனைகளை அறிவிக்கிறவர்கள். Joh_3:3-8, Tit_3:4-8, Eph_5:25-27, Col_2:12, 1Pe_3:20-21 Mar_1:4, Mat_3:11, Luk_7:29-30,

2-3 சஞ்சரித்து ஞானஸ்தானம் கொடுப்பவர்கள் :-

கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளின் மூலம் தேவனுடைய ஆலோசனைகளை சிந்தித்து தியானித்து உணர்ந்து கொள்ளும் வகையில் தெளிவாக போதிக்கிறவர்கள். Joh_3:22-23 ,Gen_5:24, Gen_6:9, Mal_2:6-9, 1Co_1:14-17, Jer_23:18-22 , Isa_41:21-24,

2-4 இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்தானம் கொடுப்பவர்கள் :-

கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளின் மூலம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தைப் பற்றின தேவனுடைய ஆலோசனைகளை தெளிவாக போதிக்கிறவர்கள். Act_2:38, Act_2:41, Act_8:12-13, Act_8:16, Act_8:12-13, Act_19:3-5, Act_22:16, Rom_6:3, Gal_3:27, Act_11:15-18, Act_16:13-15, Act_18:8, Act_22:16, Rom_6:3,

2-5 பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்தானம் கொடுப்பவர்கள் :-

கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளின் மூலம் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தைப் பற்றின தேவனுடைய ஆலோசனைகளை தெளிவாக போதிக்கிறவர்கள். Mat_28:19-20,

2-6 ஜலத்தினால். ஞானஸ்தானம் பெற்றுக் கொள்ளுகிறவர்கள் :- கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளின் மூலம் தேவனுடைய ஆலோசனைகளை தங்கள் ஆத்துமாவில் ஏற்றுக் கொண்டு தங்கள் மனிதனுடைய ஆலோசனைகளை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்து மனந்திரும்புகிறவர்கள். Joh_1:31, Joh_3:23, Luk_7:29-30, Mar_16:16, Luk_3:7, Luk_3:12,

2-7-0 ஜலத்தினால். ஞானஸ்தானம் பெற்றுக் கொண்டவர்களுடைய ஆத்துமா/இருதயத்திலிருந்து வெளிப்படும் கிரியைகள் :-

2-7-1 இருதயமாகிய நிலத்தின் வழியருகே விதைக்கப்பட்டவர்கள்:-

தேவனுடைய இராஜ்ஜியத்தின் வசனத்தைக் கேட்டும் உணர்ந்து கொள்ளாமல் இருக்கிறவர்கள்.

2-7-2 கற்பாறையான இருதயத்திலே விதைக்கப்பட்டவர்கள்:-

தேவனுடைய இராஜ்ஜியத்தின் வசனத்தைக் கேட்டு, சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டு கொஞ்சகாலத்தில் வசனத்தின் நிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைகிறவர்கள்.

2-7-3 முள்ளுள்ள இருதயத்திலே விதைக்கப்பட்டவர்கள்:-

தேவனுடைய இராஜ்ஜியத்தின் வசனத்தைக் கேட்கிறவனாக இருந்தும் உலக கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால் பலன் அற்றுப்போனவர்கள்.

2-7-4 நல்ல இருதயத்திலே விதைக்கப்பட்டவர்கள்:- தேவனுடைய இராஜ்ஜியத்தின் வசனத்தைக் கேட்கிறவர்களும் இருதயத்தில் உணர்ந்து கொள்ளுகிறவர்களுமாக இருந்து, 30% 60% 100% ஆகிய பல நிலைகளில் பலன்/கனி கொடுக்கிறவர்கள்.

Mat_13:3-9, Mat_13:18-23, Mat_13:24-30, Mat_13:31-32, Mat_13:34-44, Mat_13:10-17, Mar_4:2-9, Mar_4:10-12, Mar_4:13-20, Mar_4:26-29, Mar_4:30-34, 1Co_15:35-42, 1Co_15:43-50,

Joh_4:34-38, Gal_6:6-10, Luk_8:4-9, Luk_8:10-15, 2Co_9:6-10, Isa_55:6-11, Heb_6:1-8, Jer_23:18-24, Jer_23:25-32,

2-8 ஜலத்தினால். ஞானஸ்தானம் பெற்றுக் கொள்ளாமல் இருக்கிறவர்கள்:-

கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளின் மூலம் தேவனுடைய ஆலோசனைகளை தங்கள் ஆத்துமாவில்/ இருதயத்தில் ஏற்றுக் கொண்டு மனந்திரும்பாமல்; தங்கள் மனிதனுடைய ஆலோசனை களினால் தன்னுடைய ஆத்துமாவில் பிழைக்கிறவர்கள். Joh_1:31, Joh_3:23, Luk_7:29-30, Mar_16:16, Luk_3:7, Luk_3:12,

2-9 கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகள் ஆத்துமாவில்/ இருதயத்தில் மாம்சமாக உருமாற்றம் அடைகிறது :-

கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளின் மூலம் தேவனுடைய ஆலோசனைகளை தங்களுடைய வாய்க்கும், இருதயத்திற்கும் சமீபமாக வைத்திருக்கிறபோது: அவைகள் ஆத்துமாவில்/ இருதயத்தில் கர்ப்பம் தரித்து நன்மை தீமைகளை பகுத்தாராய்கிறது.

இப்படி பகுத்தறிந்த தீமைகளை / பாவத்தை / மனிதனுடைய ஆலோசனைகளை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்து மனந்திரும்புகிறபோது; அவைகள் ஆத்துமாவில்/ இருதயத்தில் உருமாற்றம் அடைந்து தேவனுடைய நீதியின் வார்த்தையாக மறுபடியும் பிறக்கிறது.

இந்த தேவனுடைய நீதியின் வார்த்தைகள் கிரியைகளாக நிறைவேறுகிறபோது பூரண வளர்ச்சியடைந்து விசுவாசத்திலிருந்து விசுவாசத்திற்கு முன்னேறி தன்னுடைய ஆத்துமா நித்திய ஜீவனில் பிழைக்கிறது. இந்த ஆத்துமாவின் சரீர அவயவங்கள்,உடல் ஊனமில்லாமல் மறுபடியும் பிறந்து. தேவனுக்கு முன்பாக தேவ நீதியில் பிழைத்து தேவனுடைய பிள்ளையாக மாறுகிறது. Joh_1:12-14, Joh_8:41-44, 1Jo_2:28-29, 1Jo_3:9-10, 1Jo_4:6-7, 1Jo_5:1-2, 1Jo_5:18, Act_13:33, 1Co_4:15, 1Pe_1:23, Jam_1:13-18, Rom_9:10-14, Gal_4:19, Gal_4:19-27, Gal_4:28-31,

இந்த ஆத்துமா/ இருதயம் தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் குறித்த தரிசனங்களை கண்டு, கேட்டு, உணர்ந்து கொண்டு, இருதய சந்தோஷத்தினால் மகிழ்சியடைந்து தன்னுடைய ஆத்துமா நித்திய ஜீவனில் பிழைக்கிறது.
Rom_10:6-11, Deu_30:11-14, Eze_11:19, Ecc_5:5-6, Psa_65:1-2 , Pro_4:20-22, Job_14:19-22, Joe_2:28, Job_28:12-14, Job_28:20-22, Zec_2:12-13, Zec_11:9, Zec_11:16, Zec_14:12, Job_26:1-6, Job_14:1-6, Job_15:13-14, Job_25:1-4,

2-10 கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகள் ஆத்துமாவில்/ இருதயத்தில் மாம்சமாக உருமாற்றம் அடைகிறது; எழுத்தின்படி பொருள் :-

கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளின் மூலம் தேவனுடைய ஆலோசனைகளை சிந்தித்து தியானிக்கிறபோது, நன்மை தீமைகள் பகுத்தறியப்பட்டு, உணர்ந்து கொள்ளப்படுகிறது; அவைகளின் பொருளை தெளிவான வார்த்தைகளின் மூலம் வெளிப்படுத்தி,கிரியைகளாக நிறைவேறுகிறபோது தன்னுடைய ஆத்துமா நித்திய ஜீவனில் பிழைக்கிறது.

2-11 கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளின் ஒரு பகுதி ஆத்துமாவில் / இருதயத்தில் மாம்சமாகி மறு பகுதி அழுகின மாம்சமாக உருமாற்றம் அடைகிறது :-

கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை தங்களுடைய வாய்க்கு சமீபமாகவும், இருதயத்திற்கு தூரமாகவும், வைத்துக் கொண்டிருக்கிறபோது, அவைகளின் ஒரு பகுதி மாம்சமாக உருமாற்றம் அடைந்தும், மறு பகுதி மாம்சமாக உருமாற்றம் அடையாமலுமிருந்து, இருதயமாகிய கர்ப்பத்தில் பாதி மாம்சம் அழுகி செத்து விழுந்த பிள்ளையைப் போல, மறுபடியும் பிறக்கிற ஆத்துமாவின் சரீர அவயவங்கள்,உடல் ஊனம் உள்ளவைகளாக இருக்கிறது.

இப்படி மறுபடியும் பிறக்கிற ஆத்துமாவின் சரீர அவயவங்கள், பாதி மாம்சம் அழுகி செத்து விழுந்த பிள்ளையைப் போல,உடல் ஊனம் உள்ளவைகளாக பிறக்கிறபோது; குருடு, செவிடு, ஊமை, சப்பாணி முடக்குவாதம்,மலட்டுத்தன்மை, மற்றும் பல வகையான ஊனங்கள் வெளிப்படுகிறது.

இப்படி அநேக ஊனத்துடன் மறுபடியும் பிறக்கிற ஆத்துமாக்களுக்கு தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் குறித்த தரிசனங்களை கண்டு, கேட்டு, உணர்ந்து கொள்ளாமல் இருந்து, தங்கள் மனிதனுடைய ஆலோசனைகளினால் தன்னுடைய ஆத்துமா பிழைக்கிறது., 2Ki_5:27, 2Ki_15:5, 2Ch_26:21,

2-12 கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளின் ஒரு பகுதி ஆத்துமாவில் / இருதயத்தில் மாம்சமாகி மறு பகுதி அழுகின மாம்சமாக உருமாற்றம் அடைகிறது. எழுத்தின்படி பொருள் :-

கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளின் மூலம் தேவனுடைய ஆலோசனைகளை இருதயத்தில்/ ஆத்துமாவில் சிந்தித்து தியானிக்கிறபோது, நன்மை தீமைகளை பகுத்தறியப்பட்டு, உணர்ந்து கொள்ள முடியாமல்; அவைகளின் ஒரு பகுதி பொருளை மட்டும் வார்த்தைகளின் மூலம் வெளிப்படுத்திக் கொண்டு, மறு பகுதியின் பொருள் சிதைந்து, சிதறி உருக்குலைத்து, நிலைத்தடுமாறி, ஒழுங்கின்மையும் வெறுமையுமான வார்த்தைகளாக வெளிப்படுகிறது.

இப்படி கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகள் ஒரு பகுதி மட்டும் பொருளுக்கு உருமாற்றம் அடைந்தும், மறு பகுதி பொருளுக்கு உருமாற்றம் அடையாமல் இருக்கிறபடியால், அவைகளை கிரியைகளுக்கு நிறைவேற்ற முடியாமல், உடல் ஊனம் உள்ள பொருளாகவே மற்றவர்களுக்கு வெளிப்படுகிறது.

2-13 கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை வாந்தி பண்ணுகிறவர்களை, தேவனும் தன்னுடைய வாயிலிருந்து வாந்தி

பண்ணுகிறபடியால் அழுகின மாம்சமாக ஆத்துமாவில் மறுபடியும் பிறக்கிறார்கள்:-

கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளின் மூலம் தேவனுடைய ஆலோசனைகளை தங்களுடைய வாய்க்கு சமீபமாக வைத்துக் கொண்டிருக்கிறபோது நீதிமானாகவும், இருதயத்திலிருந்து வாந்தி பண்ணுகிறபோது பாவியாகவும் இருக்கிறபடியால் இப்ப டியுள்ளவர்களை, இருதயத்தை சோதித்தறிகிற தேவனும் தன்னுடைய வாயிலிருந்து வாந்தி பண்ணிப்போடுகிறார்.

தேவனுடைய வாயிலிருந்து வாந்தி பண்ணப்பட்டவர்கள் பாதி அழுகின மாம்சமாக இருக்கிறபடியால், மறுபடியும் பிறக்கிற ஆத்துமாவின் சரீர அவயவங்கள்,உடல் ஊனம் உள்ளவைகளாக இருக்கிறது.

மறுபடியும் பிறக்கிற ஆத்துமாவின் சரீர அவயவங்கள்,உடல் ஊனம் உள்ளவைகளாக இருக்கிறபோது; தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் குறித்த தரிசனங்களை கண்டு, கேட்டு, உணர்ந்து கொள்ளாமல் இருந்து, தங்கள் மனிதனுடைய ஆலோசனைகளினால் தன்னுடைய ஆத்துமா பிழைக்கிறது.
Rev_3:14-19, Num_12:10-14

2-14 உலகத்தில் தோன்றின மதங்களின் விசுவாசங்களை இருதயத்தில் கர்ப்பம் தரித்து ஊனம் உள்ளவைகளாக ஆத்துமாவில் மறுபடியும் பிறக்கிறவர்கள், வாழ் நாள் குறைந்து, சஞ்சலத்துடன் வாழ்ந்து மீண்டும் ஆத்துமா மரணமடைகிறது:-

கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளின் மூலம் தேவனுடைய ஆலோசனைகளை இருதயத்தில் கர்ப்பம் தரித்து ஆத்துமாவில் மறுபடியும் பிறக்காமல், தன்னுடைய சுய ஆலோசனைகளின் படியோ அல்லது உலகத்தில் தோன்றின மதங்கள் மற்றும் அவைகளின் உட் பிரிவுகளின் விசுவாசங்களையோ இருதயத்தில் கர்ப்பம் தரித்து, ஆத்துமாவில் மறுபடியும் பிறக்கிறபோது; அந்த ஆத்துமா

மனிதனுக்கு முன்பாக கொஞ்ச காலம் நீதிமானாக பிழைக்கிறது ஆனால் தேவனுக்கு முன்பாக நீதிமானாக பிழைக்க முடியாது

இந்த ஆத்துமாக்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் குறித்த தரிசனங்களை கண்டு, கேட்டு, உணர்ந்து கொள்ளாமல் இருந்து, வாழ் நாள் குறைந்து, சஞ்சலத்துடன் வாழ்ந்து மீண்டும் ஆத்துமா மரணமடைகிறது.

கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை பின்பற்றி ஆத்துமாவில் மரணம் உண்டாவதற்கு காரணமான கிரியைகளிலிருந்து நீங்கலாகி மனந்திரும்பாமல், ஸ்திரீயாகிய சபையின் உபசேதத்தின்படி மனந் திரும்புகிறவர்கள் தேவனுக்கு முன்பாக நீதிமானாக இருப்பது எப்படி? Job_15:1-35, Job_25:4, Job_39:1-8, Pro_1:10-19, Pro_2:1-22, Pro_5:1-23, Pro_6:23-35, Pro_7:1-27, Pro_9:13-18, Isa_4:1, Isa_3:12, Rev_18:1-24, Job_15:14,

2-15 ஊனம் உள்ளவர்களாகவே ஆத்துமாவில் மறுபடியும் பிறந்தவர்கள்; ஏற்கனவே ஆத்துமாவில் குருடராக இருக்கிற மற்றவர்களுக்கு வழிகாட்டுகிறபோது, இருவரும் பாதாளத்தில் இடறி விழுகிறார்கள்:-

ஊனம் உள்ளவர்களாகவே மறுபடியும் பிறந்த ஆத்துமாக்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் குறித்த தரிசனங்களை கண்டு, கேட்டு, உணர்ந்து கொள்ளாமல் இருக்கிறார்கள்; இவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஊழியத்தைசெய்கிறபோது, குருடனுக்கு வழிகாட்டுகிற குருடராக இருக்கிறார்கள்.

இந்தக் குருடர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள்ளே பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கிறவர்களையும் பிரவேசிக்க விடாமல் தேவனுடைய இராஜ்ஜியத்தை பூட்டிப்போடுகிறார்கள் இவர்களும் இவர்களை பின் தொடர்கிறவர்களும் பள்ளத்தில் /பாதாளத்தில் இடறி விழுகிறார்கள். Isa_42:18-19, Joh_9:39-41,

2Pe_1:5-9, Mat_15:13-14, Mat_23:16-17, Mat_23:19, Mat_23:24, Mat_23:26, Luk_6:39, Rom_2:18-25, Isa_9:16, Isa_56:10;

2-16 மறுபடியும் பிறந்த ஆத்துமாவின் உடல் ஊனங்களை சுகமாக்குவது அல்லது மீண்டும் ஆத்துமா உடல் ஊனங்கள் இல்லாமல் மறுபடியும் பிறப்பது:-

மறுபடியும் பிறந்த ஆத்துமாவின் உடல் ஊனங்களை கண்டறிந்து அவைகளை சுகமாக்குவது தொடர்புடைய தேவனுடைய ஆலோசனைகளை தங்கள் ஆத்துமாவில்/ இருதயத்தில் ஏற்றுக் கொண்டு மனந்திரும்புகிறபோது, ஆத்துமாவின் உடல் ஊனங்கள் சுகமடைகிறது; அல்லது கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளின் மூலம் தேவனுடைய ஆலோசனைகளை இருதயத்தில்/ ஆத்துமாவில் ஏற்றுக் கொண்டு மனந்திரும்புகிறபோது, மீண்டும் மறுபடியும் பிறக்கிற ஆத்துமாவின் சரீர அவயவங்கள்,உடல் ஊனம் இல்லாமல் பிறக்கிறது.
Mat_9:27-30, Mat_11:5, Mat_12:22, Mat_15:30-31, Mat_20:30-35, Mat_21:14, Mar_8:22-26, Mar_10:46-54, Luk_4:18-20, Luk_7:21-22, Luk_14:21, Luk_18:35-43, Joh_5:1-9, Joh_9:5-9, Joh_9:30-33, Joh_9:37-41 ,

## 3-0 கிறிஸ்துவின் ஆவியினால் மனிதனுடைய ஆவியில் மறுபிறப்பு :-

ஜலத்தினால் ஆத்துமாவில் மறுபடியும் பிறந்து தேவனுடைய இராஜ்ஜியத்தின் தரிசனங்களை கண்டவர்கள், பரிசுத்த ஆவியினால் மறுபடியும் ஆவியில் பிறந்து தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள்ளே பிரவேசிக்கிறார்கள்

3-1 ஜலத்தினால் / கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளினால் ஆத்துமாவில் மறுபடியும் பிறந்து தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் குறித்த தரிசனங்களை கண்டு, கேட்டு, உணர்ந்து கொண்ட பிறகு; தங்கள் மனிதனுடைய ஆவியை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்து ஆவியில்

மனந்திரும்புகிறபோது; பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறந்து, தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் குறித்து சொல்லப்பட்ட உவமைகளின் இரகசியங்களுக்குள்ளே பிரவேசிக்கிறார்கள்.

**பரிசுத்த ஆவியினால் ஞானஸ்தானம் :-**

கிறிஸ்துவை விசுவாசித்தவர்கள் பரிசுத்த ஆவியின் சத்திய வார்த்தைகளினால் பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை பெற்று தங்கள் ஞானத்தை சுத்திகரித்துக் கொள்ளுதல் /பரிசுத்த ஆவியுடன் உடன்படிக்கை செய்து பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளும்போது; பரிசுத்த ஆவியின் சத்திய வார்த்தைகளால் ஒருவன் மறுபடியும் பிறந்து அவன் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு உள்ளே பிரவேசிக்கிறான், அல்லது அவனுக்குள்ளே தேவனுடைய இராஜ்ஜியம் இருக்கிறது.

Mat_16:24-28, Joh_3:5, Mat_12:28, Luk_11:20, Jam_1:17-18, Tit_3:5, Mat_3:11, Luk_3:16, Mar_1:8, Joh_1:31-34, Act_1:4-5, Joh_14:16-18, Joh_14:26, Joh_15:26-27, Joh_16:7-14, Joh_17:17-23, Exo_13:21-22, Exo_14:19-20, 1Co_10:1-2, Neh_9:12, Neh_9:19-20, Psa_105:39, Psa_78:14, Exo_24:15-18, Exo_40:38, Deu_1:33, Isa_4:2-6, Psa_143:10, Job_32:8, Pro_20:27,

3-2 பரிசுத்த ஆவி:- தேவனுடைய வார்த்தைகளுக்குள்ளே வாசம் செய்யும் தேவனுடைய ஆவி /பரிசுத்த ஆவி. Heb_1:1-3, 1Co_2:6-10, 1Co_2:11-16, 2Ti_3:15-17, 2Pe_1:20-21, 1Pe_1:10-12, Rev_19:9-10, Rev_22:8-9

3-3 பரிசுத்த ஆவியினால் ஞானஸ்தானம் கொடுப்பவர்:- தேவனுடைய ஆவியானவர் /பரிசுத்த ஆவியானவர். Mat_3:11, Mar_1:7-8, Luk_3:16, Joh_1:26, Joh_1:33, Act_1:5, Act_11:16, Act_13:24-25, Act_19:4-5, Luk_12:12, Joh_7:39, Joh_14:16, Joh_14:26-28, Joh_15:26, Joh_16:7-15, Joh_20:22.

3-4 பரிசுத்த ஆவியினால் ஞானஸ்தானம் பெற்றுக் கொள்ளுகிறவர்கள் :-

ஜலத்தினால் / கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளினால் ஆத்துமாவில் மறுபடியும் பிறந்து தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் குறித்த தரிசனங்களை கண்டு, கேட்டு, உணர்ந்து கொண்ட பிறகு; தங்கள் மனிதனுடைய ஆவியை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்து ஆவியில் மனந்திரும்பி, ஓய்வு நாளை பரிசுத்தமாக ஆசரிக்கிறதினால் ஆவி ஆத்துமா சரீரத்தில் ஒருமனப்பட்டு, கர்த்தருடைய வார்த்தைகளின் மூலம் பரிசுத்த ஆவிக்காக காத்திருப்பவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளுகிறார்கள்

**3-5-0 கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளினால் ஆவி ஆத்துமாவில் மறுபடியும் பிறந்து தேவனுடைய இராஜ்ஜியத்தின் இரகசியங்களுக்குள்ளே பிரவேசிக்கிறவர்கள்.**

கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளினால் ஆவி ஆத்துமாவில் மறுபடியும் பிறந்து தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் குறித்து சொல்லப்பட்ட உவமைகளின் இரகசியங்களுக்குள்ளே பிரவேசிக்க, கிறிஸ்துவின் ஜீவ அப்பங்களுக்கு தங்களுடைய வாயும், இருதயமும் சமீபமாக வைத்துக் கொண்டிருந்து புசிக்கிறவர்கள் / ஏற்றுக்கொள்ளுகிறவர்களுடைய ஆத்துமா தேவ நீதியினால் பிழைக்கிறது. இவர்கள் பொதுவாக உலகத்தில் தோன்றின பெரிய மதங்களையோ அல்லது அவைகளின் உட்பிரிவுகளையோ கொண்டவர்களாக இருக்க மாட்டார்கள், மேலும் இவர்கள் தேவனால் முன்குறிக்கப்பட்ட 1,44,000 பரிசுத்தவான்களின் வரிசையில் வந்து சேர்ந்து, தேவர்கள் என்ற பெயரையும் பெற்றுக் கொள்ளுவார்கள்

3-5-1 புளிப்பிள்ளாத / ஜீவ அப்பமாகிய நித்திய ஜீவ வார்த்தைகளை தங்களுடைய இருதயத்தில் ஏற்றுக் கொண்டு, நீதியின் கிரியைகளை நிறைவேற்றுகிறவர்கள்; அவைகளுக்காக சந்தோஷமாக துன்பத்தை அனுபவிக்கிறபோது, தங்களுடைய

ஆத்துமா தேவ நீதியினால் பிழைக்கிறது. Deu_16:1-3, Isa_30:19-21, 1Co_5:6-8, 1Pe_4:16, 1Pe_3:17-18, 1Pe_2:20-21

3-5-2 புளிப்பிள்ளாத ஜீவ அப்பமாகிய நித்திய ஜீவ வார்த்தைகளை தங்களுடைய இருதயத்திலும் வாயிலும் ஏற்றுக்கொண்டு, தேவனுடைய ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ளுவதற்காக தங்களுடைய ஆத்துமாவில் பசிதாகம் உள்ளவர்களாக இருக்கும்போது, தேவனுடைய வார்த்தைகளுக்காக துன்பம் அனுபவிப்பார்கள். Mat_12:1-4, Mar_2:24-26, Luk_6:1-4, 1Sa_21:6

3-5-3 தேவனுடைய வாயிலிருந்து புறப்பட்ட புளிப்பில்லாத ஜீவ அப்பமாகிய நித்திய ஜீவ வார்த்தைகளின் நன்மை தீமைகள்; தங்களுடைய இருதயத்திற்கும் வாய்க்கும் சமீபமாக இருக்கும்போது வெளிப்படுகிற தேவ நீதியின் வசனங்களினால், தங்களுடைய ஆத்துமா தேவ நீதியினால் பிழைக்கிறது. Deu_8:3, Mat_4:3-4, Luk_4:4, Mat_8:5-8, Jer_9:20, Exo_23:25-27, Isa_33:14-17, Psa_132:13-16, Psa_37:25, Job_22:22, Job_23:12, Pro_2:6-7

3-5-4 புளிப்பிள்ளாத அப்பங்களை ஓய்வு நாள் தோறும் தேவனுக்கு பலி செலுத்துவது. Lev_24:5-9

3-5-5 புளிப்புள்ளவைகளை தேவனுக்கு பலி செலுத்த வேண்டாம். Exo_23:18, Exo_34:25, Lev_2:11, Lev_6:17

3-5-6 புளிப்புள்ளவைகளை நீங்கள் புசிக்க வேண்டாம்.

Amo_4:5, Exo_12:15-20, Exo_13:3, Exo_13:7, Hos_7:3-4

3-5-7 புளிப்பிள்ளாத ஜீவ அப்பமாகிய தேவனுடைய நித்திய ஜீவ வார்த்தைகளை தங்களுடைய இருதயத்தில் ஏற்றுக் கொள்ளாதவர்கள் புசிக்கும் சில துன்பத்தின் அப்பங்கள். Psa_80:4-6, Psa_102:9-10, Psa_127:1-2, Pro_4:14-17, Pro_31:26-27, Eze_12:18-20, Hos_7:3-9

3-5-8 கிறிஸ்துவின் ஜீவ அப்பங்களுக்கு தங்களுடைய வாயும், இருதயமும் சமீபமாயிருக்கிறது. Rom_10:6-11, Deu_30:11-14, Job_28:12-14, Job_28:20-22, Gen_1:1-2, 1Co_13:1-2

3-5-9 தேவனுடைய நித்திய ஜீவ வார்த்தைகளை தங்களுடைய இருதயத்தில் ஏற்றுக் கொள்ளுகிறபோது சரீரமும், ஆவியும் உயிர்ப்பிக்கபடுகிறது. Joh_3:3-8; Joh_12:24; Eze_14:1-8, Rom_8:10, 1Pe_3:17-18, 1Pe_2:20-21, 1Co_15:35-38

3-5-10 தேவனுடைய நித்திய ஜீவ வார்த்தைகளை தங்களுடைய இருதயத்தில் ஏற்றுக் கொள்ளுகிறபோது தேவனுடைய வார்த்தைகளின் சரீரமும், ஆவியும், தேவனுடைய சித்தத்திற்கேற்றபடி உள்ள மேனியுடன் உருமாற்றம் அடைகிறது. Job_26:1-5, Job_14:4, Rom_4:17, Heb_11:3, 1Co_15:39-46, 1Co_2:11-16, 1Co_2:6-10 .

தேவனுடைய நித்திய ஜீவ வார்த்தைகள் உருமாற்றம் அடைந்த மேனியுடன், ஊழிய அழைப்பின் பல உபதேச வசனங்கள் வெளிப்படுகிறது. , 1Co_14:6 . , 2Ti_3:15-17 . .

3-5-11 தேவனுடைய நித்திய ஜீவ வார்த்தைகளை தங்களுடைய இருதயத்தில் ஏற்றுக் கொள்ளுகிறபோது உருமாற்றம் அடைந்து, உயிர்ப்பிக்கப்பட்ட ஆவியுடன் தேவ நீதியின் வார்த்தைகள் வெளிப்படுகிறது. Mal_2:1-9, Gen_6:8-9, Jer_23:21-22, Jdg_5:9-11, Isa_41:21-24, Pro_3:9-10 , Mal_3:7-12

3-5-12 தேவனுடைய நித்திய ஜீவ வார்த்தைகளை தங்களுடைய இருதயத்தில் ஏற்றுக் கொள்ளுகிறபோது உருமாற்றம் அடைந்து, உயிர்ப்பிக்கப்பட்ட ஆவியுடன் ஆரோக்கியமான உபதேசங்கள் வெளிப்படுகிறது. Tit_1:9, 1Ti_1:7-11, 1Ti_6:3-5, 2Ti_2:15-19, 2Ti_1:13, 2Ti_4:3, Tit_1:13-16, Tit_2:1-2, Heb_5:12-14

3-5-13 தேவனுடைய நித்திய ஜீவ வார்த்தைகளை தங்களுடைய இருதயத்தில் ஏற்றுக் கொள்ளுகிறபோது தேவ

நீதியின் பிரமாணத்தினால் தங்களுடைய ஆத்துமா தேவ நீதியினால் பிழைக்கிறது. Deu_29:1, Deu_5:1-4, Rom_9:4, Rom_3:1-2, Lev_18:1-5, Eze_18:24, Eze_20:11, Eze_20:13, Eze_20:21, Psa_19:1-6, Psa_19:7-14, Psa_119:1-8

3-5-14 தேவனுடைய நித்திய ஜீவ வார்த்தைகளை தங்களுடைய இருதயத்தில் ஏற்றுக் கொள்ளுகிறபோது உயிர்ப்பிக்கப்பட்ட ஆவியுடன் கிறிஸ்துவின் மூல உபதேச வசனங்கள் வெளிப்படுகிறது. Heb_6:1-2, Heb_5:12-14, Isa_4:1-6, Isa_2:1-6, Isa_3:12-15, Isa_5:13-14

பழைய ஏற்பாட்டில் யேகோவா என்னும் நாமத்தில் வெளிப்பட்ட மூல உபதேசங்கள்:-

1. புத்திர சுவீகாரம் 2. மகிமை 3. உடன்படிக்கைகள்
4.நியாயப்பிரமாணம் 5. தேவாரதனை 6. வாக்குத்தத்தங்கள்
7. தேவனுடைய வாக்கியங்கள் 8. தேவனுடைய வாக்கியங்களின் ஊழியத்தில் பங்கு பெறுதல் Rom_9:4, Rom_3:1-2

புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்து என்னும் நாமத்தில் வெளிப்பட்ட மூல உபதேசங்கள்:-

1. செத்த கிரியைகளிலிருந்து நீங்கலாகும் மனந்திரும்புதல்
2. தேவன் பேரில் வைக்கும் விசுவாசம்
3. ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம்
4. கைகளை வைக்குதல்
5. மரித்தோரின் உயிர்த்தெழுதல்
6. நித்திய நியாயத்தீர்ப்பு
7. நீதியின் வசனம் / பிரமாணம்
8. நீதியின் வசனத்தின் ஊழியத்தில் பங்கு பெறுதல்

Heb_5:12-14, Heb_6:1-2

3-5-15 தேவனுடைய வாயிலிருந்து புறப்பட்ட நியாயப்பிரமாணமும், தீர்க்க தரிசனங்களும் தங்களுடைய இருதயத்திற்கும் வாய்க்கும் சமீபமாயிருக்கும்போது வெளிப்படுகிற மூன்று காலங்களின் தொடர்புடைய தேவ நீதியின் வசனங்களினால் தங்களுடைய ஆத்துமா தேவ நீதியினால் பிழைக்கிறது. Rom_3:20-22, Mat_5:17, Mat_7:12, Mat_22:36-40, Luk_16:16-17, Mat_11:13-15, Luk_1:17, Mal_4:6, Isa_3:4-5, Hos_6:1-3, Luk_12:2-3, Luk_8:17-18, Luk_9:16-17

3-5-16 தேவனுடைய வாயிலிருந்து புறப்பட்ட உவமைகளில் சுரமண்டலத்தின் ஏழு சுரங்களைப் போல வெளிப்படுகிற (1. தேவனுடைய வேதம். 2. தேவனுடைய வழிகள் 3. நீதி நியாயங்கள். 4. சாட்சிகள். 5. கட்டளைகள் 6. கற்பனைகள் 7. பிரமாணங்கள்) ஆகிய ஏழு தேவனுடைய வார்த்தைகளையும் தங்களுடைய வாய்க்கும் இருதயத்திற்கும் சமீபமாயிருக்கும் போது வெளிப்படுகிற பரலோக இராஜ்ஜியத்தின் தொடர்புடைய தேவ நீதியின் வசனங்களினால் தங்களுடைய ஆத்துமா தேவ நீதியினால் பிழைக்கிறது. Psa_92:2-3, Psa_71:22, Job_30:31, Rev_5:8-10, Rev_15:2-4, Psa_49:4, Psa_78:2, Eze_20:49, Eze_17:2, Mar_4:10-12, Luk_8:10, Mat_13:10-15, Mat_13:34-35, Isa_6:8-10

3-5-17 தேவனுடைய வாயிலிருந்து புறப்பட்ட வேதமும் கிறிஸ்துவின் சாட்சி ஆகமமும் தங்களுடைய வாய்க்கும் இருதயத்திற்கும் சமீபமாயிருக்கும்போது வெளிப்படுகிற, நிகழ்காலத்தின் தொடர்புடைய தேவ நீதியின் புதிய வசனங்களினால் தங்களுடைய ஆத்துமா தேவ நீதியினால் பிழைக்கிறது. Isa_8:16-20, 2Pe_1:16-21, Isa_50:10-11, Isa_41:21-24, Joh_10:35, Rev_1:2, Rev_1:9, Rev_6:9, Rev_12:11, Rev_12:17, Rev_14:12, Rev_19:9-10 , Rev_20:4

3-5-18 தேவனுடைய வாயிலிருந்து புறப்பட்ட முத்திரை அடையாளங்களின் மூலம் மனிதனுக்கும் தேவனுக்கும் மத்தியில் அடையாளமாக கொடுக்கப்பட்ட தேவ வார்த்தைகளை, தங்களுடைய வாய்க்கும் இருதயத்திற்கும் சமீபமாக

வைத்திருக்கிறபோது வெளிப்படுகிற தேவ நீதியின் வசனங்களினால்; தேவனுடைய வீட்டிலே நடைபெறும் நியாயத்தீர்ப்பிலிருந்து தங்களுடைய ஆத்துமா விடுதலையாக்கப்பட்டு தேவ நீதியினால் பிழைக்கிறது.

தேவனுடைய வீட்டிலே தேவனுடைய முதல் நியாயத்தீர்ப்பு / இருதயமாகிய தேவனுடைய வீட்டிலே, தேவனுடைய முதல் நியாயத்தீர்ப்பு துவங்குகிறது. 1Co_3:16-17, 2Co_6:16, 1Pe_4:17-18, Jer_25:29, Isa_66:6, Luk_19:41-46 , Jer_7:11-12, Amo_9:1

3-5-19 தேவனுடைய வீட்டிலே நடைபெறும் தேவனுடைய முதல் நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பித்துக்கொள்ள ஆண்பிள்ளைகள் தங்களுடைய நெற்றியில் பெற்றுக்கொள்ளும் தேவ முத்திரையின் ஏழு அடையாளங்கள்

தேவனுடைய சத்தியமான வார்த்தைகளினால் தேவனுடைய இரட்சிப்பை பெற்றுக்கொண்ட ஜென்ம பாவ மனிதனுடைய நெற்றியில் / அறிவில் தேவனுடைய ஏழு முத்திரையின் அடையாளங் களை பெற்றுக் கொள்ளாமலிருக்கும்போது; அவன் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட தேவனுடைய இரட்சிப்பு அவனுக்குள் மரணமடைகிறது. இதற்கு இணையாக அவனுடைய ஆவிக்குரிய மனிதனும் அவனுக்குள் மரணமடைகிறான் இப்பொழுது இரட்சிப்பின் சந்தோஷம் இல்லாமல் அந்தகாரத்தின் வல்லமைக்கு அடிமைப்படுகிறான்.

தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஏற்பாட்டில் 1,44,000 பரிசுத்தவான்களை பிரித்தெடுப்பதற்காக தேவ வார்த்தை என்னும் நாமத்தில் வெளிப்பட்ட மூல உபதேசங்கள் / தேவனுடைய இராஜ்ஜியத்தின் மூல உபதேசங்கள்:-

1. ஜாதிகளின் எந்த ஒரு முறையையும் பின்பற்றக் கூடாது.
Lev_18:1-5, Eze_11:12-13

2. கர்த்தருடைய பஸ்காவை புசிக்க வேண்டும். Gen_17:9-14, Exo_12:48.

3. ஓய்வு நாள் பிரமாணத்தை பின்பற்ற வேண்டும்.
Exo_16:4-5, Exo_16:11-19, Exo_20:8-11

4. மனச்சாட்சிப் பிரமாணத்தை பின்பற்ற வேண்டும்.
Rom_2:23-29, 1Jo_3:20-33

5. இயேசு கிறிஸ்துவின் சாட்சியை பின்பற்ற வேண்டும்.
Joh_3:31-36, Rev_6:9

6. பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்
Eph_1:13, Eph_4:30

7. பலிபீடத்தின் சட்ட திட்ட பிரமாணங்களை பின்பற்ற வேண்டும்.
Exo_29:37, Exo_30:28-29

8. தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து ஊழியத்தில் பங்குபெற வேண்டும். Isa_65:8-9, Isa_65:12-16, Isa_33:15-17

3-5-20 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய வாயும் இருதயமும் சமீபமாக வைத்துக் கொண்டிருப்பவர்கள்; தேவனால் முன் குறிக்கப்பட்டவர்கள் வரிசையில், தேவனிடத்தில் வந்து சேர்ந்து, தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்தை புசித்து, தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுக்கிற தேவ சித்தத்தை நிறை வேற்றுகிறபடியால், தங்களுடைய ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ளுகிறார்கள். Isa_65:1, Rom_10:20, Rom_4:5-8, Psa_32:1-2, Rom_8:27-33, Rom_9:10-16, Rom_9:30-33, Isa_65:8-9, Rom_11:1-5, Isa_65:13-15, Mal_3:13-18, Joh_3:27, Jer_10:23, Pro_16:9, Amo_4:13, Isa_40:14, Joh_6:39-40, Joh_6:44-45, Joh_6:53-57, Joh_6:65

**3-5-21 வேத புஸ்தகத்தின் ஏழு முத்திரைகளை உடைப்பதற்கும் திறந்து வாசிப்பதற்கும் ஜெயங்கொண்டிருக்கிற ஆட்டுக்குட்டியானவரின் ஏழு கண்கள்:-**

உலகத்தோற்றத்திற்கு முன்னே அடிக்கப்பட்ட ஆட்டுக்கு ட்டியானவரின் ஏழு கண்கள், தேவனுடைய ஏழு ஆவிகளாக பூமியெங்கும் அனுப்பப்படுகிறது. முதலாவது எல்லா ஆவி, ஆத்து மாக்களின் சிந்தனைகளிலும், இரண்டாவது ஆவியின்படி தேவனுடைய பாதபீடமாகிய பூமியெங்கும் / தேவன் நடந்து சென்ற பாதங்களின் அடையாளங்களாக வெளிப்படுகிற, வேத புஸ்தகத்தின் தேவனுடைய வார்த்தைகளிலெங்கும், ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின சுவிசேஷ புஸ்தகமெங்கும், ஒரு முனை தொடங்கி மறுமுனை மட்டும் அசைவாடி, ஏழு முத்திரைகளை உடைக்கவும் திறந்து வாசிக்கவும் அதிகாரமுள்ளவைகளாக அனுப்பப்படுகிறது. Rev_5:6, 2Ch_16:9, Zec_4:10, Zec_3:9, Rev_1:4-5, Rev_2:1, Rev_2:18, Rev_3:1, Rev_4:5,

**3-5-22 தேவனுடைய ஏழு முத்திரைகளை உடைக்கவும் திறந்து வாசிக்கவும் அதிகாரம் பெற்றவைகள் கிறிஸ்துவின் வார்த்தைகள் :-**

தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற கிறிஸ்துவின் வார்த்தைகள் தேவனுடைய ஏழு கண்களின் வெளிச்சத்தைப் போல ஏழு ஆவிகளாக பூமியெங்கும் மகா தீவிரமாக செல்லுகிறது, அதன் பார்வைக்கு மறைவாக ஒன்றும் தப்புவதில்லை. தேவனுடைய வார்த்தைகளின் வெளிச்சம் இருட்டில் பிரகாசிக்கும் போது விடிவெள்ளி நட்சத்திரத்தின் வெளிச்சம் போலவும், வானவில்லின் வெளிச்சத்தைப் போலவும் பிரகாசிக்கிறது.

வானவில் வெளிச்சத்தின் பரிமாணங்களில் ஏழு வண்ணங்கள் பிரதிபலிப்பது போல தேவனுடைய வார்த்தைகளிலிருந்து ஏழு வகையான தேவனுடைய பிரமாணங்கள்

வெளிப்படுகிறது. தேவனுடைய வாயிலிருந்து புறப்பட்ட கிறிஸ்துவாகிய வார்த்தைகளிலிருந்து வெளிப்படுகிற பரிமாணங்களின் ஓசைகள் சுரமண்டலத்தின் ஏழு இராகங்களைப் போல பிரதிபலித்து, கீழே குறிப்பிடுகிற தேவனுடைய ஏழு வகையான பிரமாணங்களின் ஓசையாக வெளிப்பட்டு தொனிக்கிறது.

1. வேதம் 2. சாட்சிகள் 3. வழிகள் 4. கட்டளைகள் 5. பிரமாணங்கள் 6. கற்பனைகள் 7. நீதி நியாயங்கள் Psa_119:1-8, Psa_19:1-10, Lev_18:1-5, Deu_29:1, Psa_147:19-20, Psa_78:1-12, Psa_78:67-68, 2Ki_17:13-20, 2Ki_17:32-41,

**3-5-23 தேவனுடைய வாயிலிருந்து புறப்பட்ட ஏழு பிரமாணங்களும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறது :-**

தேவனுடைய வாயிலிருந்து புறப்பட்ட ஏழு பிரமாணங்கள் ஒவ்வொன்றும், ஒரு யுத்த வீரனைப் போல ஜெயங்கொள்ளுவதற்காகவும் ஜெயங்கொள்ளுகிறவைகளாகவும் புறப்பட்டு, தன் மணவறையிலிருந்து புறப்படுகிற மணவாளனைப் போலிருந்து, தனக்கு நியமிக்கப்பட்ட தன் பாதையில் ஓட மகிழ்ச்சியாயிருந்து, தேவன் என்ன காரியமாக அனுப்பினாரோ, அந்த காரியங்களை தேவன் விரும்புகிற காரியமாக செய்து முடித்து, ஜெயங்கொண்டவைகளாக மீண்டும் தன் வரிசையின் படி தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக வந்து சேர்ந்து; சகல ஜனங்களையும் நியாயத்தீர்ப்பதற்காக சாட்சிகளாகவும், அற்புதங்களாகவும் அடையாளங்களாகவும் தங்களுடைய கிரியைகளை வெளிப்படுத்திக் காட்டுகிறது. Rev_6:1-2, Psa_19:1-10, Psa_147:15, Joe_2:1-2, Isa_5:25-30, Jer_1:11-19, Psa_147:19-20, Mal_3:1, Rev_9:13-21,

**3-5-24 தேவனுடைய ஏழு ஆவிகளும் ஜெயங்கொண்ட பிறகு முதலாவது சிங்காசனத்திற்கு முன்பாக தேவனுடைய ஏழு அடையாளங்களை சாட்சியாக வெளிப்படுத்திக் காட்டுகிறது:-**

1 வானவில்லின் ஏழு வண்ணங்கள் Rev_4:3, Rev_10:1,

2 ஏழு ஆவிகள் Rev_4:5, Rev_3:1,

3 ஏழு கண்கள் Rev_1:14, Rev_2:18, Rev_5:6, Zec_4:10

4 ஏழு நட்சத்திரங்கள் Rev_3:1, Rev_2:1, Rev_1:16,
5 ஏழு குத்து விளக்குகள் Rev_2:1,
6 ஏழு தீபங்கள் Rev_4:5,
7 குத்து விளக்கின் ஏழு அகழ்கள்
Rev_11:1-4, Zec_4:1-6, Zec_4:11-14,

3-5-25 தேவனுடைய வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகளுக்கு தங்களுடைய வாயும் இருதயமும் சமீபமாக இருந்த போதிலும், தங்களுடைய இருதயம் தேவனுடைய ஆலோசனைகளை உணர்ந்து கொள்ளாமலும், அவைகளை தங்களுடைய வாயினால் தெளிவாக பேச முடியாமலும் இருப்பதற்கு தங்களுடைய ஆத்துமாவில் தடையாக வருகிற சில விசேஷமான காரணங்கள்.

தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஊழிய அழைப்பை பெற்றுக்கொண்டவர்கள் தெளிவாக பேசுவதற்கு தடையாக வருகிற சில விசேஷமான காரணங்கள்

1. ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணங்களை பெற்றுக் கொண்டவர்களுக்கு ஆவி, ஆத்துமாவில் குருட்டுத்தன்மையை உண்டாக்குகிற பொல்லாத ஆவி நீங்கும்போது தேவனுடைய வார்த்தைகளை தெளிவாக பேச முடியும். Mat_9:27-28, Mat_11:5, Mat_12:22, Mat_15:14, Mat_15:30-31, Mat_20:30, Mat_21:14, Mat_23:16-17, Mat_23:19, Mat_23:24, Mat_23:26, Mar_8:22-23, Mar_10:46, Mar_10:49, Mar_10:51, Luk_4:18, Luk_6:39, Rom_2:19, 2Pe_1:9, Rev_3:17

2. ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணங்களை பெற்றுக் கொண்டவர்களுக்கு ஆவி, ஆத்துமாவில் செவிட்டுத் தன்மையை உண்டாக்குகிற பொல்லாத ஆவி நீங்கும்போது தேவனுடைய வார்த்தைகளை தெளிவாக பேச முடியும். Mat_9:32-33, Mat_12:22, Mat_15:30-31, Luk_11:14, Mat_11:5, Mar_7:32, Mar_7:37, Mar_9:25, Luk_7:22

3. ஊழியஅழைப்பின் அளவுப் பிரமாணங்களை பெற்றுக் கொண்டவர்களுக்கு தேவதரிசனங்கள் வெளிப்படுத்தப் படும்போது

அவைகளை விசுவாசியாமற் போனால், தரிசனம் நிறை வேறும் காலம் வரை ஊமையாயிருந்து பின்பு தேவ தரிசனத்தை எழுதுவதினால் நாவின் கட்டு அவிழ்க்கப்பட்டு தேவனுடைய வார்த்தைகளை தெளிவாக பேச முடியும். Luk_1:11-20, Luk_1:57-64, Luk_1:65-70, Luk_1:71-79

4. ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணங்களை பெற்றுக்கொண்டவர்கள் தேவ அறிவை அடைந்த பிறகு தங்கள் இருதயத்தில் அர்த்தமில்லாத வார்த்தைகளை பிரித்தெடுப்பதால் தேவனுடைய வார்த்தைகளை தெளிவாக பேச முடியும். Heb_5:12-14, Pro_25:4, Pro_10:20, Jer_15:16-21

5. ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணங்களை பெற்றுக் கொண்டவர்கள் தேவ தரிசனத்தை அடைந்த பிறகு, நான் அசுத்த உதடுகள் உள்ள மனிதன் என்று தேவனுக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தும்போது அவன் உதடுகள் அக்கினியால் பரிசுத்தமாக்கப் பட்டு தேவ வார்த்தைகளை தெளிவாக பேச முடியும். Isa_6:5-10

6. தேவனால் முன் குறிக்கப்பட்டவர்கள் தேவ சித்தத்தை அறிந்த பிறகு, நான் சிறுபிள்ளை எனக்கு பேசத் தெரியாது என்று தன்னை; தேவ சமுகத்தில் தாழ்த்தும்போது தேவனே அவர்கள் உதடுகளை தொடுவதினால் அவர்கள் தெளிவாக பேச முடியும். Jer_1:4-9

7. ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணங்களை பெற்றுக் கொண்டவர்கள் தேவனுடைய வார்த்தைகளை புசித்து, கலக வீட்டாருக்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பை கூறின பின்பு அவைகள் நிறைவேறும் காலம் வரை ஊமையாயிருந்து பின்பு தேவனுடைய நியாயத்தீப்பை தெளிவாக பேச முடியும். Eze_3:24-27, Eze_4:25-27

8. தேவனுடைய ஞானத்தை பெற்றுக் கொள்ளுவதற்காக ஆவியில் எளிமையுள்ளவனாக இருந்து தன்னை தேவனுக்கு முன்பாக தாழ்த்துகிறபோது தேவனுடைய சத்தியாமான வார்த்தை களின் ஞானத்தை தெளிவாக பேச முடியும். Dan_10:14-19

**3-6-0 கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளினால் ஆவி ஆத்துமாவில் மறுபடியும் பிறந்து, ஆவிக்குரியவைகளில் இடறி விழுந்து கொண்டிருக்கிறவர்கள்.**

முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடாமல், தங்கள் சுய நீதியை நிலை நிறுத்த முயற்சி செய்து, நியாயப்பிரமாண நீதியின் கிரியைகளின் மூலம் தேவ நீதியின் பிரமாணத்தை தேடிக்கொண் டிருப்பவர்கள்; ஆவிக்குரியவைகளில் இடறி விழுந்து கொண்டிருக்கிறார்கள்.

பரலோக இராஜ்ஜியத்தின் வாசல் கதவுகளை தொடர்ந்து தட்டிக்கொண்டிருப்பவர்கள்; கிறிஸ்துவின் ஜீவ அப்பங்களுக்கு தங்களுடைய இருதயம் தூரமாக விலகியிருந்து கொண்டு, அவைகளை தங்களுடைய வாய்க்கு மட்டும் சமீபமாக வைத்துக் கொண்டிருக்கிறபோது, கிழே குறிப்பிடுகிற பல காரணங்களினால் ஆவிக்குரியவைகளில் இடறி விழுந்து கொண்டிருக்கிறார்கள்.

3-6-1 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய இருதயம் தூரமாக விலகியிருந்து கொண்டு ; அவைகளை தங்களுடைய வாய்க்கு மட்டும் சமீபமாக வைத்துக் கொண்டிருந்து புசிக்கிறவர்கள். / அறிக்கையிடுகிறவர்களுடைய ஆத்துமா, மாயக்காரனுடைய நீதியினால் பிழைக்கிறது. இவர்கள் பொதுவாக உலகத்தில் தோன்றின பெரிய மதங்களையோ அல்லது அவைகளின் உட்பிரிவுகளையோ கொண்டவர்களாக இருப்பார்கள்.

3-6-2 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தன்னுடைய இருதயம் தூரமாக விலகியிருந்து கொண்டு, அவைகளை தன்னுடைய வாய்க்கு மட்டும் சமீபமாக வைத்திருக்கிறபோது; தேவனுடைய வார்த்தைகளையும் தன்னுடைய இருதயம் விரும்புகிற வார்த்தைகளையும் கலந்து தன்னுடைய வாயினால் அறிக்கை செய்து கொண்டு, தன்னுடைய இருதயமும் மாம்சமும் விரும்புகிற மாயக்காரனுடைய நீதியாகிய

மாயைகளினாலும் / பொய்யினாலும் தன்னுடைய ஆத்துமாவின் கிரியைகளை வெளிப்படுத்திக் காட்டுகிறது.

3-6-3 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய இருதயம் தூரமாக விலகியிருக்கிறவர்களுடைய வாயிலும், இருதயத்திலும் வெளிப்படுகிற மாயக்காரனுடைய கிரியைகள் ; தேவனுக்கு முன்பாக நீதி இல்லாமலும் மனிதனுக்கு முன்பாக நீதி இல்லாமலும், வெளிப்படுகிறது. ஆகையால் இவர்கள் தங்களை மனிதர்களுக்கு முன்பாக நீதிமான்களாக காட்டுகிறார்கள், இவைகளையே தன்னுடைய ஆத்துமாவின் ஆகாரமாகவும் புசித்து, மற்றவர்களுடைய ஆத்துமாவின் ஆகாரமாகவும் புசிக்க கொடுக்கிறார்கள்.

3-6-4 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய வாய் சமீபமாயிருக்கிறது. Jer_12:1-2, Isa_29:10-14, Eze_33:31-33, Isa_58:1-2, Isa_48:1-2, Mat_15:8-9, Mar_7:6-7, Pro_5:3-7

3-6-5 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய இருதயம் தூரமாக விலகியிருக்கிறது. Jer_18:11-12, Eze_11:21, Hos_13:6, Zec_7:12, Jer_2:25, Jer_7:23-24, Jer_17:5, Jer_16:12

3-6-6 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய இருதயம் தூரமாக விலகியிருக்கிறபோது, கள்ள தீர்க்க தரிசனங்கள் வெளிப்படுகிறது. Jer_14:14, Jer_23:16-17, Jer_23:28-32, Eze_13:1-8, Eze_13:9-16, Eze_13:17-23, Eze_14:7-10, 1Jo_2:3-6

3-6-7 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய இருதயம் தூரமாக விலகியிருக்கும் போது; தங்களுடைய மாயக்காரனுடைய பொய்களும் மாயைகளும் திரளான ஆற்று வெள்ளம் போல கழுத்து வரை கரை புரண்டு வந்து, மனிதனுடைய வாயிலே தேவன் போட்ட கடிவாளத்தைப் போல

அவனை அலைக்கழிக்கிறது. Jer_9:3-6, Jer_9:8-9, Isa_41:21-24, Isa_28:14-18, Isa_5:18-22, Isa_8:5-8, Isa_30:28

3-6-8 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய இருதயம் தூரமாக விலகியிருக்கிறபோது ; கிழக்கு திசையாரின் மாயைகளின் சாஸ்திரங்களுக்கு இருதயம் அடிமைப்பட்டிருந்து அவைகளை கக்குகிறது /வாந்தி பண்ணுகிறது. Isa_2:5-6, Job_15:2-3, Job_15:31-35, Job_27:21-23, Hos_12:1, Hos_8:7

3-6-9 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய இருதயம் தூரமாக விலகியிருக்கிறபோது ; தங்களுடைய வாய் அர்த்தமில்லாத / உபயோகமில்லாத திரளான வார்த்தைகளை கக்குகிறது / கடல் அலைகளினால் கரையில் ஒதுங்குகிற அழுக்கைப்போல தன்னுடைய வாய் ஆலோசனைகளை கக்குகிறது. Isa_28:8-9, Isa_57:20-21, Jud_1:10-13 , Rev_12:15-17

3-6-10 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய இருதயம் தூரமாக விலகியிருக்கிறபோது, தங்களுடைய மனம் விரும்புகிற பரலோக இராஜ்ஜியத்தின் பதவிகளை எடுத்துக் கொள்ளுவற்கு முயற்சி செய்து கொண்டு, பொய்யான மாயைகளின் தரிசனங்களும் திரளாக பொங்கி வருகிறது. Job_8:13-19, Job_15:31-35, Isa_33:14-17, Mat_24:45-51, 1Sa_12:19-21, Deu_32:16-21, Jer_16:19, Rom_8:21

3-6-11 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய இருதயம் தூரமாக விலகியிருக்கும்போது ; தங்களுடைய இருதய ஆலோசனைகளினால் பொய்யான மாயைகளின் புதிய வெளிப்பாடுகள் / தரிசனங்கள் திரளாக பொங்கி வருகிறது. Isa_5:18-22, Isa_28:14-19, Isa_30:27-28, Jer_2:4-9, Jer_8:19, Psa_24:1-6, Psa_119:37, Psa_144:11-15, Jon_2:8

3-6-12 தேவனுடைய வார்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய இருதயம் தூரமாக விலகியிருக்கும்போது,

மனிதர்களுக்கு முன்பாக தங்களை நீதிமான்களாக வெளிப்படுத்திக் கொண்டு மனிதர்கள் மூலம் வரும் மகிமையை தேடுவது. Mat_23:7, Joh_7:18, Joh_12:43, Jud_1:16-19, Isa_2:5-9, Jer_22:17

3-6-13 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய இருதயம் தூரமாக விலகியிருக்கும் போது ; சபைகளின் மூலம் வருகிற அதிகார பதவிகளுக்கு போராடுவது. Isa_7:1-7, Isa_7:10-15, Isa_8:5-10, Isa_8:11-15, Amo_5:14-15

3-6-14 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய இருதயம் தூரமாக விலகியிருந்து கொண்டு; அவைகளை தங்களுடைய வாய்க்கும் மட்டும் சமீபமாக வைத்திருப்பவர்களுடைய ஊழிய அழைப்பு மனிதர்களால் தீர்மானிக்கப்பட்டு நியமிக்கப்படுகிறது. Isa_7:21-22, Exo_29:1, 2Ch_13:9-11, 2Ki_17:32-34, Mat_23:1-8, Mat_19:12

3-6-15 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தன்னுடைய வாய் சமீபமாகயிருந்து கொண்டு அவைகள் தன்னுடைய இருதயத்திற்கு தூரமாக விலகியிருக்கிறபோது; தேவனுடைய ஆலோசனைகளை உணர்ந்து கொள்ளாமல், தன்னுடைய இருதயத்தின் சுயமான ஆலோசனைகளையும், தேவனுடைய வார்த்தைகளையும் கலந்து தன்னுடைய வாய் அறிக்கை செய்து மனிதனுடைய கற்பனைகளை உபதேசங்களாக வெளிப்படுகிறது.

3-6-16 தேவனுடைய வெளிப்பாடுகளின் மூல உபதேசங்களுக்கு தங்களுடைய இருதயம் தூரமாக விலகியிருக்கிறபோது; தங்களுடைய வாய் மனிதனுடைய கற்பனைகளை, தங்களுடைய மூல உபதேசங்களாக அறிக்கை செய்து, ஒவ்வொருவருடைய இருதய சிந்தனைகளுக்கு ஏற்றபடி தேவனுடைய வார்த்தைகளில் மார்க்க பேதங்களையும், பிரிவினைகளையும் உருவாக்கிக் கொண்டு, தங்களுடைய மூல உபதேசங்களை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவது.

3-6-17 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தன்னுடைய வாய் சமீபமாகயிருந்து கொண்டு அவைகள் தன்னுடைய இருதயத்திற்கு தூரமாக விலகியிருக்கிறபோது கீழே குறிப்பிடுகிற காரியங்கள் சம்பவிக்கிறது.

1. தேவனுடைய தீர்க்க தரிசனங்களின் தொடர்புடைய மூன்று காலங்களை உணர்ந்து கொள்ளாமல் இருப்பது.

2. தேவ நீதி மற்றும் மனுஷ நீதி தொர்புடைய தேவனுடைய மூல உபதேசங்களை அறிந்து கொள்ளாமல் இருப்பது.

3. தன்னுடைய இருதயத்தில் சாட்சியிடுகிற மாயக்காரனுடைய மாயைகளின் வெளிப்பாடுகளை, சாத்தானுடைய வாயிலிருந்து புறப்படுகிற திரளான ஆற்று நீரைப்போல தன்னுடைய வாயிலிருந்து புறப்பட்டு கரை புரண்டோடுகிறது.

4. மாயக்காரனுடைய ஆத்துமாவிற்கு தேவனுடைய வார்த்தைகளின் பஞ்சம் தொடங்குகிறது.

3-6-18 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய இருதயம் தூரமாக விலகியிருக்கும் போது, தேவனுடைய வார்த்தைகளின் பஞ்சம் பெருகுகிறது. Amo_8:11-14, Eze_4:16-17, Eze_5:16-17, Eze_14:13-14, Eze_14:21, Lev_26:26, Isa_3:1-7, Isa_5:13, Psa_105:16, Amo_4:4-8

3-6-19 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய இருதயம் தூரமாக விலகியிருந்து கொண்டு, தங்களுடைய வாயினால் மட்டும் தேவனுடைய நாமத்தை அறிக்கையிடுகிற தேவ ஜனங்களுக்கு தேவனுடைய வார்த்தைகளின் பஞ்சம் வருகிறது. Lam_1:11, Lam_4:4-5, Jer_15:2, Jer_24:8-10, Jer_29:17-18, Jer_44:12-13, Jer_44:27, Lam_5:10, Eze_5:12, Isa_51:17-19

3-6-20 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தீர்க்க தரிசிகளின் இருதயம் தூரமாக விலகியிருக்கும் போது, அவர்களுக்கு தேவனுடைய வார்த்தைகளின் பஞ்சம் வருகிறது. Jer_14:12-13, Jer_11:20-22, Jer_14:15-16, Jer_14:18, Isa_55:1-3, Jer_14:1-6, Jdg_5:11

3-6-21 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய இருதயம் தூரமாக விலகியிருந்து கொண்டு, தேவனுடைய நாமத்தை தரித்துக் கொண்ட தேவ ஜனங்களுக்கு தேவனுடைய வார்த்தைகளின் பஞ்சம் வருகிறது. Isa_14:30, Eze_6:11-12, Job_24:5, Job_15:23, Jer_16:4-5, Jer_18:21, Jer_34:17, Eze_12:15-16

3-6-22 தேவனுடைய வார்த்தைகளின் பஞ்சத்தை உணர்ந்து கொண்டவர்கள், எப்பொழுது மனந்திரும்பி தேவனுடைய வார்த்தைகளை தங்களுடைய இருதயத்திற்கு சமீபமாக ஏற்றுக்கொள்ளுகிறார்களோ, அப்பொழுது தேவனுடைய வார்த்தைகளின் வல்லமைகள் அவர்களுடைய பஞ்சத்தை நீக்கி நித்தியமான ஆசீர்வாதங்களை கொண்டு வருகிறது. Exo_20:6, Isa_55:10-11, Psa_29:4, 1Sa_3:19, Psa_119:140, Jer_23:28-29, Mic_2:7, Zec_1:2-6, Mat_24:35, Mar_13:31, Luk_21:33, Heb_4:12, Rev_19:13, Psa_19:7, Deu_32:45-47, Gal_3:15-17

3-6-23 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய இருதயம் தூரமாக விலகியிருந்து கொண்டு, அவைகளை தங்களுடைய வாய்க்கு மட்டும் சமீபமாக வைத்திருக்கும்போது ; தங்களுடைய மாயக்காரனுடைய ஆத்துமா விரும்பி புசிக்கும் சில மாயைகளின் அப்பங்கள்.

**1 புளிப்புள்ளஅப்பங்கள் :-**

பரிசேயர் மற்றும் சதுசேயரின் உபதேசங்கள். Mat_16:11-12, Mar_8:15, Luk_12:1, Gal_5:9, Mar_8:14-15, 1Co_5:6-8

**2 மனிதனுடைய கற்பனைகளாகிய அப்பங்கள்:-**

மனிதன் உருவாக்கின உபதேசங்கள் Mat_15:8-9, Mar_7:6-8, Lev_26:26, Isa_29:10-14

**3 சொந்தமாக உருவாக்கின அப்பங்கள்:-**

சொந்தமாக உருவாக்கின உபதேசங்கள் Isa_4:1, Jer_7:18, Isa_28:7-13, Jer_44:17-18

**4 மனுஷரால் உருவாக்கப்பட்ட சபையின் மூல உபதேசமாகிய அப்பங்கள்:-**

1. இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தை அறிக்கை செய்தல் Rom_10:9-10
2. பாவ மன்னிப்பிற்கு இரட்சிப்பை பெற்றுக்கொள்ளுதல் Act_2:38
3. ஞானஸ்தானம் பெற்றுக்கொள்ளுதல் Mar_16:16
4. பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுதல் Act_2:1-4
5. சபை ஐக்கியத்தில் கலந்து கொள்ளுதல் Heb_10:25
6. காணிக்கை, தசமபாகம் செலுத்துதல் Mal_3:8-10
7. பரிசுத்த பந்தியில் கலந்து கொள்ளுதல் 1Co_11:23-27, Isa_4:1
8. தேவனுடைய ஊழியத்தில் பங்கு பெறுதல் Mar_16:15

**5 இரகசியமான அப்பங்கள் :-**

வேத வசனங்களின் இரகசியங்களை மட்டும் தேடி தங்களுடைய ஆவிக்குரிய அப்பங்களாக புசிப்பது. Pro_9:13-18, Pro_5:3-7, Pro_7:1-5, Pro_2:16-20, Pro_6:23-24, Pro_22:14, 1Co_13:1-2

**6 கல்லுகளை அப்பங்களாக மாற்றி புசிப்பது :-**

உபவாசத்திற்கு பின்பு தங்களுடைய இருதய ஆலோசனைகளினால் திரளாக பொங்கி வருகிற பொய்யான மாயைகளின் புதிய வெளிப்பாடுகள் / தரிசனங்களை தங்களுடைய ஆவிக்குரிய அப்பங்களாக புசிப்பது. Luk_4:1-4, Isa_58:1-7

**7 அசுத்தமான அப்பங்கள் :-**

தசமபாகம் / காணிக்கை /பொருத்தனை / ஆகிய தேவனுடைய காரியங்களில் அவைகளின் பிரமாணங்களின் படி தேவனுக்கு செலுத்தாமல் தேவனை வஞ்சிக்கிறபோது; தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்கி தேவனையும் மனிதனையும் ஏமாற்றுவது. Mal_1:6-8, Mal_1:12-14, Psa_69:21-24, Rom_11:7-10, 1Co_10:21-23, 1Co_11:27-32

8 மேஜை யிலிருந்து கீழே விழுந்த அப்பங்கள் :-

பரிசுத்தவான்கள் செய்த தவறுதல்களை / பாவங்களை தானும் செய்து, தன்னுடைய கிரியைகளை நியாயப்படுத்துவது. 1Sa_3:19, 2Ki_10:10, Joh_7:8-10, Rom_3:7

3-6-24 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய இருதயம் தூரமாக விலகியிருந்து, அவைகளை தங்கள் வாய்க்கு மட்டும் சமீபமாக வைத்துக் கொண்டு புசிக்கிறவர்கள்; எப்பொழுது மனந்திரும்பி/ பாவத்திற்கு மரித்து நீதிக்கு பிழைத்திருக்கிறார்களோ, அப்பொழுது தங்களுடைய இருதயத்திலும் தேவனுடைய வார்த்தைகளை புசித்து தங்களுடைய ஆத்துமாவில் தேவ நீதியில் பிழைக்கவே பிழைக்கலாம். Rev_3:19-22, Heb_9:1-4, Heb_9:6-8, Heb_9:9-10, Heb_9:13, Heb_9:11-12, Heb_9:14, Heb_10:19-22, 1Pe_3:18-19, Rom_8:1-4, Rom_7:22-25, Job_28:12-14, Job_28:20-22

## 3-7-0 சத்திய ஆவி / வஞ்சக ஆவியின் அடையாளங்கள்

3-7-1 நான் போவேனேயாகில் சத்திய ஆவியாகிய தேற்றரவாளனை உங்களிடத்திற்கு அனுப்புவேன் / மாம்சத்தில் வெளிப்பட்ட இயேசுகிறிஸ்துவாகிய நான்; உங்களைவிட்டு பிரிந்து செல்வேனேயாகில் சத்திய ஆவியாகிய தேற்றரவாளனை உங்களிடத்திற்கு அனுப்புவேன். Joh_16:7-13, Joh_14:26, Joh_15:26, Joh_15:7, Joh_15:16,2Co_5:16,

3-7-2 மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது.
1Jo_4:1-6; 2Jo_1:7-11; 1Ti_3:16,
3-7-3 தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்
Rom_1:5, Rom_9:5; Heb_2:12-15;2Co_5:16-21; Heb_5:7;

3-7-4 மாம்சத்தின்படி தாவீதின் குமாரன் ஆவியின்படி தேவனுடைய குமாரன்
Mat_22:42-45; Mar_12:35-37; Luk_20:41-44; Psa_110:1; Heb_1:13;
3-7-5 இயேசுகிறிஸ்து மாம்சத்திலே கொலையுண்டு ஆவியிலே உயிர்ப்பிக்கபட்டார்
Rom_8:1-4, 1Pe_3:17-21, 1Pe_4:5-6,
3-7-6 முதலாம் கூடாரமாகிய மாம்சத்தில் வெளிப்பட்ட இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணுகிற வரைக்கும் இரண்டாம் கூடாரமாகிய சத்திய ஆவியாகிய தேற்றரவாளன் வெளிப்படுகிற மார்க்கம் இன்னும் வெளிப்படவில்லை
Heb_9:8-10, Heb_9:11-14, Heb_9:15-17; Heb_10:19-22;
3-7-7 மகா மேன்மையுள்ள தேவ பக்திக்குரிய இரகசியம்
1Ti_3:16, 1Ti_4:8 , 1Ti_6:3-6, 2Ti_3:5, Tit_1:3-4, 2Pe_1:3-7,

## 3-8-0 சத்திய ஆவி / வஞ்சக ஆவியின் கிரியைகள்

**3-8-1** பரிசேயர் சதுசேயர், மற்றும் மனுஷரால் உருவாக்கப்பட்ட புளிப்புள்ளஅப்பங்களின் மூல உபதேசங்களை விட்டு; கிறிஸ்துவின் புளிப்பில்லாத பஸ்கா பண்டிகையை ஆசரித்திருக்க வேண்டும்/ பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து இரட்சிக்கப்பட்டு கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளில் நிலைத்திருக்க வேண்டும்.

பரிசேயர் சதுசேயர், மற்றும் மனுஷரால் உருவாக்கப்பட்ட புளிப்புள்ளஅப்பங்களின் மூல உபதேசங்கள்

1. இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தை அறிக்கை செய்தல் Rom_10:9-10
2. பாவ மன்னிப்பிற்கு இரட்சிப்பை பெற்றுக்கொள்ளுதல் Act_2:38
3. ஞானஸ்தானம் பெற்றுக்கொள்ளுதல் Mar_16:16
4. பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுதல் Act_2:1-4
5. சபை ஐக்கியத்தில் கலந்து கொள்ளுதல் Heb_10:25
6. காணிக்கை, தசமபாகம் செலுத்துதல் Mal_3:8-10
7. பரிசுத்த பந்தியில் கலந்து கொள்ளுதல் 1Co_11:23-27, Isa_4:1
8. தேவனுடைய ஊழியத்தில் பங்கு பெறுதல் Mar_16:15

Mat_16:11-12, Mar_8:15, Luk_12:1, Gal_5:9, Mar_8:14-15, 1Co_5:6-8, Mar_14:1-2; Mar_14:12-16;Mar_14:22-27; Luk_6:1-5; Luk_22:7-14;Luk_22:15-22; Joh_6:27-35, Joh_6:36-39, Joh_6:40-42, Joh_6:43-45, Joh_6:54-58,1Co_11:24-33; Mat_24:20-22; Mat_26:17-19; Mat_26:26-29; Lev_26:34-35;

3-8-2 ஓய்வு நாளைக் குறித்து சொல்லப்பட்ட தேவனுடைய பிரமாணங்களின் வழியாக கடந்து சென்று எருசலேமாகிய கர்த்தருடைய வார்த்தைகளின் மூலம்; ஆவி ஆத்துமா சரீரத்தில் ஒருமனப்பட்டு,பரிசுத்த ஆவிக்காக காத்திருப்பவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளுகிறார்கள் Act_1:4-5; Act_1:12; Isa_2:1-4; Mic_4:1-3; Isa_4:1-6, Luk_24:47-49;

3-8-3 சத்திய ஆவியாகிய தேற்றரவாளனை ஒருவன் காத்திருந்து பெற்றுக் கொள்ளுகிறபோது; அவனுக்குள்ளே தேவனுடைய நீதியின் பிரமாணங்களின் தொடர்புடைய பாவங்கள்/ நீதியின் கிரியைகள்/ நியாயத்தீர்ப்புகள் ஆகிய இவைகளை தேவன் கண்டித்து உணர்த்திக் கொண்டிருப்பார். Joh_16:7-13, Joh_14:26, Joh_15:26, Joh_15:7, Joh_15:16, (sermon on the mount)

**3-8-4 பரிசுத்த ஆவியின் வரங்கள். 1Co_12:8-10,**

1 ஞானத்தைப் போதிக்கும் வசனம்
2 அறிவை உணர்த்தும் வசனம்
3 விசுவாசம்
4 குணமாக்கும் வரங்கள்
5 அற்புதங்களைச் செய்யும் சக்தி
6 தீர்க்க தரிசனம் உரைத்தல்
7 ஆவிகளைப்பகுத்தறிதல்
8 பற்பல பாஷைகளைப் பேசுதல்

9 பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல்

## 3-8-5 பரிசுத்த ஆவியின் ஊழிய அழைப்புக்கள்.Eph_4:11-15,

1 அப்போஸ்தலர்கள்
2 தீர்க்கதரிசிகள்
3 சுவிசேஷகர்கள்
4 மேய்ப்பர்கள்
5 போதகர்கள்

## 3-8-6 பரிசுத்த ஆவியின் கிரியைகள்

1 இரகசியங்கள்
2 அறிவு
3 தீர்க்க தரிசனம்
4 போதகம்
5 உபதேசங்கள்
6 கடிந்து கொள்ளுதல்
7 சீர்திருத்தல்
8 நீதியைபடிப்பிக்குதல். 2Ti_3:16-17, 1Co_14:6-9, Neh_9:20,

## 3-8-7 பரிசுத்த ஆவியினால் பெலனடைகிறவர்கள் சாட்சியாக இருக்கும் இடங்கள்

1 எருசலேம்
2 யூதேயா
3 சமரியா

Act_1:8, Mat_10:5-7, Mat_28:18-20, Mar_16:15-16;Luk_24:47-49, Act_3:26, Act_13:46, Act_18:6, Act_26:20,

## 3-8-8 பரிசுத்த ஆவியினால் பரலோக இராஜ்ஜியத்தின் விருந்து

பரிசுத்த ஆவியினால் ஆத்துமாவில் மறுபடியும் பிறந்தவர்கள் இருதயமாகிய சுரமண்டலம் வாசித்து சிந்தித்து /தியானித்து; பரலோக இராஜ்ஜியத்தின் இரகசியங்களை விருந்தாக புசித்து உணர்ந்து கொள்ளுகிறார்கள். Mat_22:1-14, Luk_14:1-24, Luk_12:31-48, Luk_13:23-30, Rev_3:20,Rev_19:1-9, Isa_65:13-16, Est_1:4-22,

### 3-8-9 பரிசுத்த ஆவியினால் நீதியின் வசனம்

பரிசுத்த ஆவியைபெற்றுக் கொண்டவர்களுக்கு தீமையை வெறுத்து நன்மையை தெரிந்துகொள்ளும் பகுத்தறிவில் பூரண வயதை பெற்றுக்கொள்ளுகிறபடியால் ஆரோக்கியமான / பலமான ஆகாரமாகிய இயேசு கிறிஸ்துவின் நீதியின் வசனத்தை புசிக்க முன்னேறுகிறார்கள்.1Ti_1:9-11, 2Ti_1:13, 2Ti_4:3, Tit_1:9, Tit_1:13-14, Tit_2:1-2 : Pro_15:4; Tit_3:5-11,Heb_9:1-5; Heb_9:6-10;Heb_10:1-3; Heb_10:11;Heb_9:13-17;Heb_10:19-22;

### 3-8-10 பரிசுத்த ஆவியின் அடையாளங்கள்

பரிசுத்த ஆவியைபெற்றுக் கொண்டவர்கள் பரிசுத்த ஆவியிடைய **மூன்**று காலங்கள் தொடர்புடைய தீர்க்க தரிசன வசனங்களை பகுத்து, பிரித்து, உணர்ந்து கொள்ளுகிறபடியால்; தேவனுடைய வசனங்களுக்கு விசுவாசிகளாகவும்,மற்றவர்கள் தேவனுடைய வசனங்களுக்கு அவிசுவாசிகளாகவும் இருக்கிறதை அவர்களே தங்களுடைய வார்த்தைகளினால் மற்றவர்களுக்கு வெளிப்ப டுத்துகிறார்கள்.Co_14:20-25,

## 3-8-11 அவிசுவாசிகளின் அடையாளங்கள்

பரிசுத்த ஆவியைபெற்றுக் கொள்ளாத அவிசுவாசிகள்: தேவனுடைய வசனங்களை **மூன்**று காலங்கள் தொடர்புடைய தீர்க்க தரிசன வசனங்களை பகுத்து, பிரித்து, உணர்ந்து கொள்ளாதபடியால்; உபயோகமற்ற வார்த்தைகளையும் வினோதமான கருத்துக்களையும்

திரளாக பேசி அவிசுவாசிகளின் அடையாளங்களை உறுதிப்படுத்துகிறார்கள்.Co_14:20-25,

## 3-8-12 வஞ்சகஆவிகளுக்கு புலம்பலின் விருந்து

தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய இருதயம் தூரமாக விலகியிருந்து கொண்டு, அவைகளை தங்களுடைய வாய்க்கு மட்டும் சமீபமாக வைத்திருந்து தேவனைத் தேடி கொண்டிருக்கிறவர்களை, தேவன் நாள் முழுவதும் கரம் நீட்டி கூப்பிடுகிறார்; ஆனால் அவர்களோ தேவனுடைய கரத்தை நோக்கிப் பார்த்து, தேவனுடைய ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ளாமல், தங்களுடைய இருதய ஆலோசனைகளை பின்பற்றிக் கொண்டு, நாள் முழுவதும் தேவனை கோபப்படுத்துகிறபடியால், அவர்கள் விரும்புகிற நம்பிக்கையின் வாசலாகிய ஆகோரின் பள்ளத்தாக்கிற்கு தேவன் கொண்டு வந்து, தன் இளவயதில் புசித்த புலம்பலின் விருந்தை கொடுத்து, புலம்பலின் பாட்டை மீண்டும் பாட வைக்கிறார்.

தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய இருதயம் தூரமாக விலகியிருந்து கொண்டு, அவைகளை தங்களுடைய வாய்க்கு மட்டும் சமீபமாக வைத்திருந்து தேவனைத் தேடி கொண்டிருக்கிறவர்கள்; தேவனுடைய சத்தியத்தை

விசுவாசக்காமல் அநீதியில் பிரியப்படுகிறபடியால், அவர்கள்பொய்யை விசுவாசக்கும்படியாக கொடிய வஞ்சகத்தை /வஞ்சிக்கிற ஆவிகளின் வல்லமைகளையும் பொய்யான அற்புத அடையாளங்களையும் செய்து, தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

**பாட்டு:-** நீ எங்களை கலங்கப்பண்ணினதென்ன? இன்று கர்த்தர் உன்னைக் கலங்கப்பண்ணுவார்.Rom_10:21, Isa_65:2-7,

Pro_1:23-33, Jer_18:15-17, Zec_7:9-14, Isa_65:10-12, Hos_2:13-16, Jos_7:22-26

## 4-0 ஆவி, ஆத்துமாவில் மறுபடியும் பிறந்தவர்களுக்கு களங்கமில்லாத ஞானப்பால் :-

***கிறிஸ்துவின் உபதேசத்தின் மிகப்பெரிய இரண்டு உட்பிரிவுகள்***

1. கிறிஸ்துவின் மூல உபதேச வசனங்களாகிய களங்கமில்லாத ஞானப்பால் என்ற ஆறு படிகளின் விதிமுறைகள்.

2. கிறிஸ்துவின் பலமான உபதேசத்தின் பலமான ஆகாரமான நீதியின் வசனம் என்ற ஏழாவது படியின் விதிமுறைகள். Heb_6:1-2, Heb_5:12-14,

### 4-1 கிறிஸ்துவை பற்றின மூல உபதேச வசனங்களான களங்கமில்லாத ஞானப்பால் கீழ்க்கண்ட ஆறு தலைப்புகளில் வெளிப்படுத்தப்படுகிறது.

1, செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல்.
(ஆவி, ஆத்துமாவில் மரணத்தை உண்டாக்கும் கிரியைகளிலிருந்து மனந்திரும்புதல்)

2, தேவன்பேரில் வைக்கும் விசுவாசம்.
( இயேசு கிறிஸ்துவினுடைய விசுவாசத்தின் சுவிசேஷம்)

3, ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம்.

4, கைகளை வைக்குதல் (ஊழியர் அழைப்பு)

5, மரித்தோரின் உயிர்த்தெழுதல்.
(இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை)

6, நித்திய நியாயத்தீர்ப்பு

### 4-2 கிறிஸ்துவை பற்றின உபதேசத்தின் பலமான ஆகாரமான நீதியின் வசனம் என்ற ஒரு தலைப்பு ஏழாவது தலைப்பாக வெளிப்படுத்தப்படுகிறது.

7, நீதியின் வசனம் / தேவ நீதியின் பிரமாணம்

Isa_28:9, Psa_8:2, Isa_3:4-5, Psa_131:2, Mat_11:25, Mat_21:16, Luk_10:21, 1Co_13:11, 1Co_3:1-2, Gal_4:19-31, Gen_21:1-12,

கிறிஸ்துவை பற்றின மூல உபதேச வசனங்களின் அறிவை ஒருவர் தொடர்ந்த பயிற்சியினால் அடைந்து, நீதியின் வசனத்திற்கு வந்து சேரும்போது கிறிஸ்துவின் பூரண அறிவை பெற்றுக்கொள்ள முடியும்.

## 5-0 களங்கமில்லாத ஞானப்பாலை பூரணமாக குடித்தவர்களுக்கு பலமான ஆகாரம்:-

கிறிஸ்துவின் களங்கமில்லாத ஞானப்பாலிலிருந்து கிறிஸ்து வின் பலமான ஆகாரத்திற்கு முன்னேறி செல்ல தேவனால் மூன்று படிகளின் அடையாளங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

1. இம்மானுவேல் / தேவன் எங்களுடன் இருக்கிறார்

2. எகிப்திலிருந்து ஈக்களும் அசீரியாவிலிருந்து தேனீக்களும்

3. மெதுவாக ஓடுகிற சீலோவாவின் தண்ணீரும் வேகமாக ஓடுகிற ஆற்று நீரைப்போல அசிரீயாவின் தண்ணீரும்.

இயேசு கிறிஸ்துவின் மூல உபதேசமாகிய களங்கமில்லாத ஞானப்பாலை பூரணமாக குடிப்பதின் மூலம் தீமையை வெறுத்து, நன்மையை தெரிந்து கொள்ளும் பகுத்தறிவை ஒருவன் பெற்றுக் கொள்கிறான். இவைகளை தொடர்ந்த பயிற்சியின் மூலம் தன்னு டைய அன்றாட வாழ்க்கையின் காரண காரியங்களுக்கேற்றபடி நடை முறைப்படுத்தும்போது; பகுத்தறிவின் பூரண வயதை பெற்றுக் கொண்டு இயேசு கிறிஸ்துவின் பலமான ஆகாரமாகிய நீதியின் வசனத்தை புசிக்க முன்னேறுகிறான்.

### *5-1- இம்மானுவேல் - தேவன் எங்களுடன் இருக்கிறார்.*

Amo_5:14, Isa_7:10-16, Isa_7:21-22, Isa_8:8, Hag_1:13, Hag_2:4-5, Joe_2:27, Zec_2:10-11, Zec_8:23, Zec_10:3-5, Isa_45:14, Zep_3:14-17, Rev_21:3,

5-1-1 நீங்கள் பிழைக்கும்படிக்குத் தீமையை அல்ல நன்மையைத் தேடுங்கள் அப்பொழுது நீங்கள் சொல்லுகிறபடியே சேனைகளின் தேவனாகிய கர்த்தர் உங்களோடே இருப்பார் Amo_5:14

5-1-2 பாலகன் தீமையை வெறுத்து நன்மையை தெரிந்து கொள்ள அறியும் நாள் வரைக்கும் வெண்ணையையும் தேனையும் பரிபூரணமாக சாப்பிடுவான்:-

கிறிஸ்துவுக்குள் புதிதாக பிறந்த குழந்தை வளரும்படி தீமையை வெறுத்து நன்மையை தெரிந்து கொள்ள அறியும் நாள் வரைக்கும் களங்கமில்லாத ஞானப்பாலிலிருந்து கிடைக்கும் நித் திய ஜீவ வார்த்தைகளை நல்ல உணவாக பரிபூரணமாக சாப்பிடு வான்.

5-1-3 ஒரு பசு இரண்டு ஆடுகள் லேவி ஆசாரியத்துவத்தின் முறை :-

ஒருவன் ஒரு இளம் பசுவையும் இரண்டு ஆட்டுக்குட்டி களையும் வளர்த்தால் அவனுக்கு களங்கமில்லாத ஞானப்பால் பரிபூரணமாக கிடைக்கும். Isa_7:21-22, Exo_29:1, Rom_12:1-2, Rom_8:3-4,

5-1-4 ஒருவன் தன்னுடைய சரீரம், ஆவி, ஆத்துமா, இவை களை தேவனுடைய வார்த்தைகளின்படி ஜீவ பலியாக ஒப்புக் கொடுத்து வளர்க்கும்போது, அவனுக்கு களங்கமில்லாத ஞானப்பால் தன்னுடைய அறிவு, புத்தி, ஞானம் இவைகளில் நித்திய ஜீவ வார்த் தைகளாக சுரந்து ஆவிக்குரிய நல்ல உணவு பரிபூரணமாக கிடைக் கிறது. 1Pe_3:18,

5-1-5 இயேசு கிறிஸ்துவின் மாதிரி வாழ்க்கையை நான் பின்பற்றி என்னுடைய பாவ சரீத்திரத்திலே என் பாவத்தை ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்கும்போது என்னுடைய ஆவி, ஆத்துமா, சரீரம், உயிர்ப்பிக்கப்பட்டு களங்கமில்லாத ஞானப்பாலின் அறிவு, புத்தி ஞானம் இவைகளை பூரணமாக குடித்து, தீமையை வெறுத்து

நன்மையை தெரிந்துகொள்ளும் பகுத்தறிவில் பூரண வயதை பெற்றுக்கொள்ளுகிறது. Heb_9:8-16, Heb_13:9-15,

5-1-6 ஒரு பசு, ஏழு ஆடுகள், ஜாதிகளுடைய ஆசாரியத்துவத்தின் பிரதிஷ்டை முறை :-

இயேசு கிறிஸ்து என்னுடைய பாவங்களுக்காக மரித்தார், நான் சபையினுடைய ஏழு உபதேசங்களை விசுவாசித்து அவைகளை ஏற்றுக்கொண்டு என் வாழ்க்கையில் பின்பற்றுகிறேன். 2Ch_13:9, 2Ki_16:9-11, 2Ki_16:15-16, 2Ki_17:27-28, 2Ki_17:32,

### 5-2 *ஈக்களின் / மாயையின் வெளிப்பாடுகளும் தேனீக்களின் காரண காரியத்திற்கேற்ற கருத்துக் கோட்பாடுகளின் வெளிப்பாடுகளும்*

5-2-1 எகிப்திலிருந்து ஈக்களைப்போல / மாயையின் தத்துவ சாஸ்திரங்களிலிருந்து அர்த்தமில்லாத வார்த்தைகள் வெளிப்படுகிறது. அவைகளை ஒன்று திரட்டும்போது நல்ல சுவையான வார்த்தைகளின் கோர்வையான கருத்துக்களாக மாறுவதில்லை / உருவாக்க முடிவதில்லை. Isa_7:17-19,

5-2-2 அசீரியாவிலிருந்து தேனீக்களைப்போல காரண காரியத்திற்கு ஏற்ற அர்த்தமுள்ள சுவையான வார்த்தைகளின் கோட்பாடுகள் வெளிப்படுகிறது. இப்படிப்பட்ட தேனீக்களைப்போல பல அர்த்தமுள்ள சுவையான வார்த்தைகளை பல இடங்களிலிருந்து ஒன்று திரட்டும்போது அவைகள் நல்ல சுவையான தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளிந்த தேன் போல சுவையான வார்த்தைகளின் கோர்வையான கருத்துக்களாக இணைக்கப்படுகிறது / உருவாக்கப்படுகிறது.

5-2-3 தெளிந்த தேன் போன்ற சுவையான அர்த்தமுள்ள வார்த்தைகளை நன்மைகளாக தெரிந்து கொண்டு சுவையில்லாத, அர்த்த மில்லாத வார்த்தைகளை தீமைகளாக வெறுத்து தள்ளிவிட வேண்டும்.

5-2-4 நல்ல தெளிந்த சுவையான வார்த்தைகளையுடைய நன்மைகளுடன், அர்த்தமில்லாத வார்த்தைகளையுடைய தீமைகளை

யும், நம்முடைய அறிவில் கலந்து வைத்திருக்கும்போது நாம் ஏற்கனவே தேனீக்களைப்போல கஷ்டப்பட்டு சேர்த்து வைத்திருக்கிற தெளிந்த சுவையுள்ள நன்மையான வார்த்தைகளின் முழுக் கட்டமைப்பையும், அர்த்தமில்லாத தீமையான வார்த்தைகளாக மாற்றி வெறுமையாக்கி விழுங்கி விடும் ; அல்லது மாயா / மாயையின் வெளிப்பாடுகள் நல்ல சுவையான தெளிந்த கருத்துக்களை உட் கொண்டு அவைகளை ஒழுங்கின்னையும் வெறுமையுமாக மாற்றி விடும். உதாரணமாக நம்முடைய நற்கிரியைகளுடன் சிறிதளவு தீமையான கிரியைகள் கலந்திருக்கும்போது அந்த முழு நற்கிரியை களின் பயனையும் தீமையான செயலாகவே வெளிப்படுத்திக் காட்டுகிறது.

தீமையை வெறுத்து நம்மையை தெரிந்து கொள்ளும்படி கீழ்க்கண்ட தலைப்புகளில் சுவையில்லாத அர்த்தமில்லாத வார்த்தை களும் சுவையுள்ள அர்த்தமுள்ள வார்த்தைகளும் கலந்து தேவனால் வெளிப்படுத்தப்படுகிறது.

5-2-5 வனாந்தரங்களின் பள்ளத்தாக்கு :- Isa_7:19, தேவ வார்த்கைளிலிருந்து இதுவரை வெளிப்படாத இரகசியங்கள்.

5-2-6 கன்மலைகளின் வெடிப்புகள் :- Isa_7:19, வேத வார்த்தைகளிலிருந்து இயேசு கிறிஸ்துவரைப் பற்றிய புதிய வெளிப் பாடுகள்.

5-2-7 முட்காடுகள் :- Isa_7:19, தேவ வார்த்தைகளிலிருந்து ஜென்ம கரும பாவங்களின் பிரமாணங்கள்

5-2-8 மேய்ச்சலுள்ள இடங்கள் :- Isa_7:19 தேவ வார்த் தைகளிலிருந்து ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்ட இரகசியங்களை மீண்டும் பசுமையாக தோன்றும் படி வெளிப்படுத்தப்பட்ட புதிய வெளிப்பாடுகள்.

***5-3 இஸ்ரவேலர் அசட்டை பண்ணுகிற மெதுவாக ஓடுகிற சீலோவாவின் ஊற்றுத்தண்ணீரும், அவர்கள் சந்தோஷித்து களி கூருகிற வல்லமையுள்ள திரளான / வேகமான அசீரியாவின் ஆற்றுத் தண்ணீரும்.***

5-3-1 இஸ்ரவேல் ஜனங்கள் மெதுவாக ஓடுகிற சீலோவாவின் ஊற்றுத் தண்ணீரை அசட்டை பண்ணினார்கள் :-

இஸ்ரவேல் ஜனங்கள் ஒவ்வொரு நாளும் தேவனுடைய சமூகத்தில் காத்திருந்து தேவ வசனத்தை படித்து அவைகளை சிந்தித்து தியானித்து அதன் மூலம் தேவனுடைய மிருதுவான ஆலோசனையை கேட்டு, தங்கள் ஆவிக்குரிய காரியங்களில் ஜீவனோடிருந்து வளர்வதை வெறுத்து அசட்டை பன்னினார்கள். Jos_18:1, Jos_18:8-10, Jos_19:51, Jos_22:12, 1Sa_1:3, 1Sa_1:24, 1Sa_3:21, 1Ki_2:27, Psa_78:60, Jer_7:12, Jer_7:14, Jer_26:6, Jer_26:9, Jer_41:5, Neh_3:15

5-3-2 இஸ்ரவேல் ஜனங்கள் வல்லமையுள்ள திரளான ஆற்றுத்தண்ணீரைக் குறித்து சந்தோஷித்து களிகூருகிறார்கள் :-

இஸ்ரவேல் ஜனங்கள் புற ஜாதிகளின் இராஜாக்களுடைய இராஜரீகத்தையும் அதன் சகல ஆடம்பரங்களையும் குறித்து சந்தோஷித்து களிகூருகிறார்கள். எனவே தேவன் அவர்கள் விருப்பத்திற் கேற்றபடி அவர்கள் தீமையை வெறுத்து நன்மையை தெரிந்து கொள்ளும்படி கீழே குறிப்பிட்ட தலைப்புகளில் புற ஜாதிகளின் அரசாட்சி முறைகளும் அதன் பதவிகளின் ஆடம்பரத் தையும் அவர்களின் தரிசன வெளிப்பாடுகளாக தேவன் இஸ்ரவேல் ஜனத்திற்கு கொடுக்கிறார்.

5-3-3 ஓடைகளெல்லாம் வல்லமையுள்ள ஆற்றுத்தண்ணீர் :-Isa_8:7,

புறஜாதிகளின் ஆட்சி முறைகளும் அதன் பதவிகளும் பலவிதமான தேவ வார்த்தைகளின் தலைப்புகளில் தேவன் வெளிப் படுத்துகிறார்.

5-3-4 தண்ணீர் செல்லும் எல்லா வாய்க்காலின் கரைகளின் மேலும் ஆற்றுத்தண்ணீர் புரண்டு செல்லுதல்:-

புற ஜாதிகளின் ஆட்சி முறைகளும் அதன் பதவிகளும் ஏற்கனவே பலவிதமான தேவ வார்த்தைகளின் தலைப்புகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும், அதன் எல்லைகளை கடந்து,

தேவன் தங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட வெளிபாடுகள், மற்ற வற்றை விட மிக புதியதும் மேலானதுமானவைகளாக வெளிப் படுத்தப்பட்டிருக்கிறது.

5-3-5 ஆற்றுத் தண்ணீர் யூதேயா தேசத்திற்குள்ளே புகுந்து பிரவாகித்து கடந்து செல்லுதல் :- Isa_8:8,

புற ஜாதிகளின் ஆட்சி முறைகளும் அதன் பதவிகளின் வெளிப்பாடுகளும் யூதருடைய முறைகளுடன் கலந்து வெளிப் படும்போது மிக வல்லமையுள்ளதாகவும் மிக திரளான வெளிப் பாடகவும் காணப்படுகிறது.

5-3-6 வல்லமையுள்ள ஆற்றுத் தண்ணீர் இஸ்ரவேலரின் கழுத்து மட்டும் பொங்கி திரளாக வெளிப்படுதல் :-

யூதருடைய முறைகளுடன் கலந்த புறஜாதிகளின் ஆட்சி முறைகளும் அதன் பதவிகளின் வெளிப்பாடுகளும், தங்களுக்கு போதும் என்கிற அளவிற்கு மிக திரளாகவும் நல்ல திருப்தியாகவும் தங்கள் அறிவுக்கேற்றபடி தேவனால் வெளிப்படுத்தப்படுகிறது. இஸ்ரவேல் தாங்கள் விரும்பினபடியே வல்லமையுள்ள ஆற்றுத்தண்ணீரைப் போல ஜாதிகளின் இராஜரீகமும் அதன் மகிமையும் குறித்த வெளிப் பாடுகளை மிக திரளாக பெற்றபடியால், தேவன் எங்களோடிருக்கிறார் என்று தாங்கள் சொல்லிக்கொண்டு; மற்றவர்களையும் தங்களுடன் சேர்ந்து கொள்ளும்படி கீழ்க்கண்ட வார்த்தைகளை கொண்டு அழைக்கிறார்கள்.

5-3-7 ஜனங்களே நீங்கள் கூட்டங்கூடுங்கள் முறியடிக் கப்படுவீர்கள் :- .Isa_8:9,

ஜாதிகளின் இராஜரீகமும் அதன் மகிமையைக் குறித்த வெளிப்பாடுகள் இல்லாமல் நீங்கள் உங்களுடைய விசுவாசத்தின் படி கூடி வரும்போது மற்றவர்கள் உங்களை மேற்கொண்டு சிதறடிப்பார்கள்.

5-3-8 தூரத்தேசத்தராகிய நீங்கள் எல்லாரும் செவிகொடுங் கள் :- Isa_8:9

தேவனை விட்டு பின்வாங்குகிற நீங்கள் எல்லாரும் எங்கள் மூலம் தேவன் வெளிப்படுத்தின ஜாதிகளின் இராஜரீகமும் அதன் மகிமையையும் ஏற்றுக்கொண்டு அவைகளை சுதந்தரித்து தேவ ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

5-3-9 இடைகட்டிக் கொள்ளுங்கள் முறிந்தோடுவீர்கள்:- Isa_8:9,

உங்களுடைய விசுவாசங்களையும் அதன் வெளிப்பாடு களையும் கொண்டு நீங்கள் உங்களுடைய கட்டமைப்பை பெலப் படுத்திக்கொள்ளுங்கள், ஆனாலும் எங்கள் மூலம் தேவன் வெளிப்படுத்தின ஜாதிகளின் இராஜரீகமும் அதன் மகிமையைக் குறித்த வெளிப்பாட்டிற்கு முன்பாக நீங்கள் எதிர்த்து நிற்க முடியாமல் முறித்தோடுவீர்கள் ஏனென்றால் தேவன் எங்களுடன் இருக்கிறார்.

5-3-10 ஆலோசனை செய்யுங்கள் அது அபத்தமாகும்:- Isa_8:10,

தேவன் எங்களுக்கு கொடுத்த இராஜரீகமும் அதன் மகிமையையும் குறித்த வெளிப்பாடுகளுக்கு விரோதமாக நீங்கள் ஆலோசனை செய்யுங்கள் அவைகள் பொய்யாக மாறும்

5-3-11 வார்த்தையை வசனியுங்கள் அது நிற்காது தேவன் எங்களுடன் இருக்கிறார் :-

தேவன் எங்களுக்கு கொடுத்த இராஜரீகமும் அதன் மகிமையையும் குறித்த வெளிப்பாடுகளுக்கு இணையாகவோ அல்லது எதிராகவோ நீங்கள் வார்த்தையை பேசுங்கள் அது நிலை நிற்காது காரணம் தேவன் எங்களோடிருக்கிறார். நாங்கள் மட்டும் இந்த வெளிப்பாடுகளை பெற்றிருக்கிறோம், ஆகவே எங்களால் மட்டும் இதன் வார்த்தைகளை தெளிவாக பேசமுடியும்.

## 6-0 மனிதனுடைய ஆவி, ஆத்துமாவில் தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுக்கிற தேவ சித்தத்தை / ஊழியர் அழைப்பின் அளவுப் பிரமாணங்களை நிறைவேற்றுதல்:-

### 6-1 தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுக்கிற ஊழியர் அழைப்பின் அளவுப் பிரமாணங்கள்:-

1,அப்போஸ்தலர்கள் 2, தீர்க்கதரிசிகள் 3, சுவிசேஷகர்கள்
4, மேய்ப்பர்கள் 5,போதகர்கள்
2Co_10:12-18, Rom_12:2-6, Eph_4:7, Eph_4:13, Eph_4:16,

### 6-2 தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுக்கிற ஊழியர் அழைப்பின் அளவுப் பிரமாணங்களின் தேவனுடைய உபதேசங்கள்:-

மனிதனுடைய ஆவி, ஆத்துமாவில் தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுக்கிற தேவ சித்தத்தை / ஊழியர் அழைப்பின் அளவுப் பிரமாணங்களை நிறைவேற்றுவதற்கு பரிசுத்த ஆவியினால் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய உபதேசங்கள் 1Co_14:6-10, 2Ti_3:16-17;

1. இரகசியங்கள், 2. அறிவு, 3. தீர்க்கதரிசனம், 4. போதகம், 5. உபதேசம், 6. கடிந்துகொள்ளுதல், 7. சீர்திருத்துதல், 8. நீதியைப் படிப்பிப்பது

### 6-3 விசுவாசத்தினால் வருகிற தேவநீதியின் பிரமாணங்கள்/ இயேசு கிறிஸ்துவின் விசுவாச சுவிசேஷத்தின் பிரமாணங்கள்

Rom_1:16, Rom_12:6, Hab_2:1-4

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தையை தங்கள் வாயினால் அறிக்கை செய்து, இருதயத்தில் தேவனுடன் உடன்படிக்கை செய்து கொண்ட யாவருக்கும் இயேசு கிறிஸ்துவின் விசுவாச சுவிசேஷத்தின் பிரமாணங்கள். Mat_24:14, Mar_13:10, Joh_1:12, Gal_3:26, Exo_19:5, Joh_10:1-13, Rom_4:5, Joh_9:31

6-3-1 நான் என் காவலிலே தரித்து :- என் இருதயத்தில் எல்லா காவலுடன் நான் இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தைக்காத்துக் கொண்டு. Pro_4:23, 1Co_16:13, Col_1:22-23

6-3-2 அரணிலே நிலை கொண்டிருந்து :- தேவன் எனக்கு பகிர்ந்த விசுவாச அளவுப் பிரமாணத்தில் நிலை கொண்டிருந்து .2Co_10:14; Mat_25:15; Rom_12:3-6, Rom_15:20;

1Co_12:11-12; Eph_4:7-13; 1Pe_4:10-11, 1Co_4:6-7, 1Co_12:4-11, 1Co_12:28-31, Hab_2:1-4

6-3-3 அவர் எனக்கு என்ன சொல்லுவாரென்றும்:- தேவன் தம்முடைய அழைப்பின் எந்த சித்தத்தை செய்ய சொல்லுவா ரென்றும் கவனித்துப் பார்ப்போன்.Rom_12:2-6, Eph_1:10, Eph_5:17, Col_4:12, Act_9:6, Phi_2:13

6-3-4 தேவன் என்னை கண்டிக்கும்போது நான் என்ன உத்தரவு சொல்லுவேனென்றும், கவனித்துப் பார்ப்பேன்;-

தேவன் என்னை கண்டிக்கும் போது நான் கடிந்து கொள்ளுதலை அலட்சியம் செய்யமாட்டேன்,என்னை சீர்திருத்தும்படி கடிந்து கொள்ளுதலை ஏற்றுக்கொள்ளுவேன். Psa_141:5, Pro_13:8, Pro_15:5, Pro_15:31-32, Pro_21:20, Pro_29:15, Tit_1:14, 2Ti_3:15-17

6-3-5 தரிசனத்தை எழுதி :- தேவனுடைய கற்பனைகளை என் இருதயத்தில் எழுதி. Hab_2:2, Deu_6:4-9, Psa_37:31, Pro_3:1-9, Rom_2:14-15, Rom_2:27

6-3-6 குறித்த காலத்திற்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டி ருக்கிறது:- கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் தொடர்புடைய கடைசி காலத்திற்குத் தரிசனம் வைக்கப்பட்டிருக்கிறது. Dan_7:21, Dan_8:17, Dan_12:9, Rev_1:3, Rev_10:6, Rev_11:18, Job_24:1, Mat_16:3, Luk_12:56, Ecc_8:5-6

6-3-7 முடிவிலே அது விளங்கும் அது பொய் சொல்லாது:- தீர்க்கத்தரிசன நிறைவேறுதல்களில் அது விளங்கும். 1Co_3:13, 2Co_11:15, Mat_24:13

6-3-8 அது தாமதித்தாலும் அதற்கு காத்திரு:- அது நிச்சயமாகவே வரும் அது தாமதிப்பதில்லை. Pro_23:18, Gen_49:18, Isa_40:18, Isa_49:18, Isa_49:23, Isa_64:4, Psa_42:11, Psa_43:5

## 6-4 விசுவாசத்தினால் வருகிற தேவ நீதியின் கிரியைகள் / இயேசு கிறிஸ்துவின் விசுவாச சுவிசேஷத்தின் கிரியைகள்

6-4-1 இயேசு கிறிஸ்துவின் விசுவாச சுவிசேஷத்தின் ஆரம்பம் :- அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் கிறிஸ்து இயேசுவின் விசுவாசத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கு.

Joh_1:12, Gal_3:26, Rom_4:1-10, Joh_9:31, Joh_10:1-13, Rom_3:24-28, Tit_3:5, Eph_5:26, Eph_2:8-9, Gal_3:2-7, Gal_5:4-6, Rom_11:6

6-4-2 இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தால் நீதிமான் ஆவியின் கிரியைகளில் பிழைப்பான் :-

கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தினால் மாம்சத்தின் கிரியைகளை அழித்தால் விசுவாசத்தில் ஆவியின் கிரியைகளில் பிழைப்பான். Rom_1:17, Rom_8:1-4, Rom_8:5-11, Heb_10:36-39

6-4-3 இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தின் ஆவியில் பின்வாங்கி போகுதல் :-

கிறிஸ்து இயேசுவின் விசுவாசத்தை ஏற்றுக்கொண்டு, மாம்ச இச்சையின் கிரியைகளை ஆவியில் ஜெயங்கொள்ள முடியாதவர்கள், மாம்ச இச்சைக்கு மீண்டும் அடிமைப்பட்டவர்கள்.

Rom_8:5-6, Rom_8:13, Pro_14:14, Luk_8:13, 1Ti_6:9-12, Joh_6:51-66

6-4-4 இயேசு கிறிஸ்துவின் மூலம் பரிசுத்த ஆவியின் கிரியைகளின் வகைகள்:- தேவன் தமது சித்தப்படி ஊழியர் அழைப்பைத் தீர்மானிக்கிறார். Rom_9:2, Rom_12:2-6, 1Co_12:12 1Co_12:13-27, 1Co_15:38, 1Ti_2:20-21, Eph_4:1-13, Eph_4:13-25, Eph_2:17-22, Col_2:18-22, Phi_2:13, Act_9:6, 1Pe_4:10

6-4-5 ஊழியர் அழைப்பின் அளவுப் பிரமாணம்:- 2Co_10:12-18, Rom_12:2-6, Eph_4:7, Eph_4:13, Eph_4:16,

6-4-6 இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தில் எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணுதல்:-

Hab_2:4-6,Eze_36:5, Mal_3:13-18, Mal_4:1-6, 2Ti_2:9, Isa_65:5, Isa_66:17, Psa_83:12, Deu_19:14, Deu_27:17, Amo_6:6-7, Amo_6:13, Hos_8:4, Luk_14:7-11

6-4-7 இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தினால் ஆவியின் கிரியைகள் இல்லாதவர்கள்:-

கர்த்தராகிய இயேசுவை அறிக்கை செய்து விசுவாசத்தை ஏற்றுக்கொண்டவர்கள், கிறிஸ்துவின் ஆவியின் கிரியைகள் இல்லாதபடியால் ஆவியில் செத்தவர்கள். Jam_2:14-16, Jam_3:17-18, Mar_16:16, Joh_3:18, Joh_3:36, Joh_6:64, Jud_1:5, Tit_3:8, 1Jo_2:3-6, 1Jo_5:10, Rev_20:12

## 6-5 இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் முடிவு

இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் முடிவு கிருபையினால் வெளிப்படாமல் கிரியைகளின் மூலம் வெளிப் படுத்தப்படுகிறது. Heb_12:2, Exo_19:5, 2Th_2:3-8, 2Ti_2:12, Rev_1:8, Rev_21:6, Rev_22:13

6-5-1 கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களால் இயேசு கிறிஸ்துவின் விசுவாச துரோகிகளின் மேல் தேவன் நியாயத்தீர்ப்பை அனுப்புகிறார். Zec_11:5, Zec_11:8-10,2Ti_2:12, Mal_2:1-10, Pro_2:16-17,

6-5-2 கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையை தங்கள் வாழ்க்கையின் முடிவு வரை காத்திருந்து இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளாமல் பாதியிலே உடன்படிக்கையை முறித்தபடியால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு. Mat_10:22, Mat_24:13, Mar_13:13, Rev_2:26,

6-5-3 சத்தியத்தின் மேல் உள்ள அன்பை அங்கீகரித்து தங்களுடைய விசுவாச உடன்படிக்கையையும் ஆவிக்குரிய வாழ்க்கையையும் காத்துக்கொள்ளாமல் போனபடியால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு .2Th_2:9-10, Dan_8:11-12

6-5-4 அக்கிரமத்தின் மிகுதியினால் விசுவாச உடன்படிக்கை செய்த அநேகருடைய அன்பு தணிந்து விசுவாசத்தை இழந்து போனபடியால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு Mat_24:12

6-5-5 இயேசு கிறிஸ்துவின் மூலம் விசுவாச உடன்படிக்கை செய்த நாளில் மரணமடைந்த கேட்டின் மகனாகிய பாவ மனிதன்; மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டு பாவ கிரியைகளின் மூலம் வெளிப்படும்போது அவனுடைய விசுவாச உடன்படிக்கை அவனால் முறிக்கப்படுகிறது. Rom_6:2-11, Rom_8:9-14, Col_2:11-12, 2Th_2:3, Eph_4:22-24

6-5-6 இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையை நிலை நிறுத்துகிற பரிசுத்த ஆவி தேவனால் நீக்கப்படும்போது; தேவன் அந்த ஜனங்களுடன் செய்த உடன்படிக்கையை முறித்துப் போடுகிறார். Zec_11:5, Zec_11:8-10, 2Ti_2:12

6-5-7 தேவனுடைய வசனத்தின் சத்தியத்தை ஏற்றுக்கொண்டு இரட்சிப்படைய விரும்பாதபடியால் பொய்யை விசுவாசிக்கும்படி பரிசுத்த ஆவிக்கு பதிலாக வஞ்சக ஆவியை தேவன் அவர்களுக்குள்ளே நியாயத்தீர்ப்பாக அனுப்புகிறார். 2Th_2:11-12, 1Sa_16:14, 1Sa_16:16, 1Sa_16:23

6-5-8 இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையை முறித்த விசுவாச துரோகிகள், கள்ள தீர்க்கதரிசிகள், கள்ள அப்போஸ்தலர்கள், அந்திக்கிறிஸ்துக்கள் ஆகியவர்களிடம் வெளிப்படுகிற வஞ்சிக்கிற ஆவிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

உங்களது ஆவிக்குரிய மனிதன் உங்கள் மூலம் வஞ்சிக்கப்படாதபடி எச்சரிக்கையாயிருங்கள் Psa_49:20, Pro_19:2-3, Hos_4:6, Isa_5:13, Isa_55:1-2, 1Co_3:18, Gal_6:3-4, Col_2:4, Col_2:18-19, 1Th_4:4-8, Heb_3:12-14, Eph_4:14-16, Pro_23:29-33, Eze_33:13

6-6-0 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய வாயும் இருதயமும் சமீபமாக வைத்துக் கொண்டிருக்கிறபோது பரிசுத்த ஆவியினால் இருதயத்தில்

கண்டித்து உணர்த்தப்படும் தேவனுடைய ஆலோசனைகள் 1 பாவம் 2 நீதி 3 நீயாயத்தீர்ப்பு (மலைபிரசங்கம்)

6-7-0 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய வாயும் இருதயமும் சமீபமாக வைத்துக் கொண்டிருக்கிறபோது பரிசுத்த ஆவியினால் இருதயத்திலிருந்து வெளிப்படுத்தப்படும் கிருபை வரங்கள் 1Co_12:8-10,

1. ஞானத்தை போதிக்கும் வசனம், 2. அறிவை உணர்த்தும் வசனம், 3. விசுவாசம், 4. குணமாக்கும் வரங்கள், 5. அற்புதங்களைச் செய்யும் சக்தி, 6. தீர்க்கதரிசனம் உரைத்தல், 7. ஆவிகளைப் பகுத்தறிதல், 8. பற்பல பாஷைகளைப் பேசுதல், 9. பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல்

**6-8 இஸ்ரவேல்/ கிறிஸ்தவர்களின் சரித்திரமும் அதன் ஞானார்த்தமுள்ள சம்பவங்களும் :-**

6-8-1. இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டார்கள் :-

தேவ நாமம் தரித்த கிறிஸ்தவர்கள் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். Eze_20:1-9

6-8-2. இஸ்ரவேல் ஜனங்கள் வாக்குத்தத்த தேசத்தை சுதந்தரித்துக் கொள்ளுபடி வனாந்தரத்தின் வழியாக கடந்து வந்தார்கள் :-

தேவ நாமம் தரித்த கிறிஸ்தவர்கள் வாக்குத்தத்தமான பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள சோதனை களையும் வேதனைகளையும் கடந்து வந்தார்கள் Eze_20:10-14, Eze_20:15-22

6-8-3. இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுடைய வாக்குத்தத்த தேசத்தில் பன்னிரெண்டு கோத்திரங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட இராஜ்ஜியத்தின் ஆட்சி முறைகள் :-

தேவ நாமம் தரித்த கிறிஸ்தவர்கள் பிதாவின் வாக்குத் தத்தமாக கிடைத்த பரிசுத்த ஆவியின் ஊழியங்களும் வரங்களும்;

கிறிஸ்துவை தலையாகக் கொண்டுள்ள சரீர அவயவங்களின் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரே சரீரத்தின் ஆட்சி முறையாக செயல்படுதல்.

6-8-4. இஸ்ரவேல் ஜனங்கள் வாக்குத்தத்த தேசத்தின் ஆசீர்வாதங்களுக்குள்ளே பிரவேசித்து தங்கள் அருவருப்பான காரியங்களினாலே தேசத்தை தீட்டுப்படுத்தினார்கள் :-

தேவ நாமம் தரித்த கிறிஸ்தவர்கள் வாக்குத்தத்தின் மூலம் கிடைத்த பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதங்களுக்குள்ளே பிரவேசித்து தங்கள் அருவருப்பான காரியங்களினால் பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தினார்கள் / ஊழியத்தை தீட்டுபடுத்தினார்கள். Eze_20:23-39, Eph_4:30

6-8-5. இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுடைய வாக்குத்தத்த தேசத்திலே பிரிக்கப்பட்ட கோத்திரங்களின் இராஜ்ஜிய ஆட்சி முறைகள் :-

தேவ நாமம் தரித்த கிறிஸ்தவர்கள் வாக்குத்தத்தமான பரிசுத்த ஆவியின் மூலம் கிடைத்த கிருபை வரங்களில் / ஊழிய உடன்படிக்கையில் தங்களுடைய விசுவாச அளவை மீறி, எண்ணவேண்டியதற்கு மிஞ்சி, தன்னை உயர்த்துகிறவர்களின் கிரியைகளை, நாளானது கிறிஸ்துவின் சரீரத்தை விட்டு பிரிந்து சென்ற அவயவங்களாக தங்களுடைய பிரிக்கப்பட்ட கிரியைகளை / ஊழியத்தை வெளிப்படுத்திக் காட்டுகிறது.

6-8-6. இஸ்ரவேல் ஜனங்களின் பிரிக்கப்பட்ட இரண்டு பிரிவு ஜனங்களும் மீண்டும் சிறையிருப்பிற்கு அல்லது அடிமைத்தனத்திற்கு தேவனால் அனுப்பப்படுகிறார்கள் :-

தேவ நாமம் தரித்த கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் சரீரத்திலிருந்து பிரிந்து சென்று தங்களுடைய விருப்பப்படி செயல்பட விரும்புகிறவர்களை, அவர்கள் பெற்ற பரிசுத்த ஆவியின் ஊழியங்கள், வரங்கள் ஆகியவற்றுடன் தங்கள் விருப்பங்களுக்கே அடிமையாகும்படி தேவன் அவர்களை ஒப்புக்கொடுக்கிறார். 2Ki_17:7-23, 2Ki_17:24-29, 2Ki_17:29, 2Ki_17:30-41, Psa_106:41-48, Amo_7:8-17, Hos_4:16-19, Hos_8:1-14, Hos_9:1-10, (Hos_10:1, Hos_11:1, Hos_12:1, Hos_13:1, Chapters)

6-8-7. இஸ்ரவேல் ஜனங்கள் புற ஜாதிகளின் ஆட்சி முறையை பின்பற்றி அதற்கு அடிமைகளாக மாறுதல் :-

தேவ நாமம் தரித்த கிறிஸ்தவர்கள் புறஜாதிகளின் ஆட்சிமுறைகளை, தங்களது ஆவிக்குரிய வாழ்க்கையிலும் / ஊழிய பாதையிலும் பின்பற்றினபடியால் தங்கள் விருப்பங்களுக்கே அடிமை யாகும்படி தேவன் அவர்களை ஒப்புக்கொடுக்கிறார். Hos_4:1-11, Hos_4:12-19, Rom_1:21, Isa_5:5-16,

6-8-8. இஸ்ரவேல் ஜனங்கள் புற ஜாதிகளின் சிறையிருப்பி லிருந்து அல்லது அடிமைத்தனத்திலிருந்து தேவனால் தங்களது இராஜ்ஜியத்திற்கு திரும்புதல் :-

தேவ நாமம் தரித்த கிறிஸ்தவர்கள் புறஜாதிகளின் சிறையிருப்பிலிருக்கிற / அடிமைத்தனத்திலிருக்கிற அருவருக்கப் படதக்கதையும் அசுத்தமானவைகளையும் அகற்றி, தேவனுடைய கட்டளைகளின்படி நடக்க முன் வருகிறவர்கள் எவர்களோ; அவர்களுக்கு தேவன் புதிய ஆவியையும் புதிய இருதயத்தையும் கொடுத்து, தங்களது வாக்குத்தத்த தேசத்தின் ஆசீர்வாதங்களை திரும்பக் கொடுப்பார். Eze_20:40-44, Hos_7:1-14, Jer_24:1-7,

## 7-0 மனிதனுடைய ஜென்ம சரீரத்தின் மரணமும் ஆவிக்குரிய சரீரத்தின் உயிர்தெழுதலும்:-

### 7-1-0, ஆவி, ஆத்துமா சரீரத்தின் மரணமும் உயிர்தெழுதலும் :-

7-1-1 சாவுள்ள ஆவி, ஆத்துமா, தேவனுடைய நித்திய ஜீவ வார்த்தைகளின் மூலம் சாவாமையை தரித்துக் கொள்ளும்போது; ஆவி, ஆத்துமாவின் மரணம், ஜெயமாக விழுங்கப்பட்டு ஆவி, ஆத்துமாவின் மரணம், ஜீவனாக உயிர்ப்பிக்கப்படுகிறது. 1Co_15:50-54

7-1-2 அழிவுள்ள சரீரம் தேவனுடைய நித்திய ஜீவ வார்த்தைகளின் மூலம் அழியாமையை தரித்துக் கொள்ளும் போது

சரீர மரணம், ஜெயமாக விழுங்கப்பட்டு, மரணம் உயிர் தெழுதலாக வெளிப்படுகிறது 1Co_15:50-54.

7-1-3 ஆவி, ஆத்துமா மற்றும் சரீரத்தின் மரணம் தேவனுடைய நித்திய ஜீவ வார்தைகளினால் ஜெயமாக விழுங்கப்படாமல் இருக்கும் போது அவைகள் தொடர்ந்து மரணத்திலே நிலை கொண்டிருக்கிறது.

7-1-4 ஆவி, ஆத்துமாவின் மரணமும், சரீரத்தின் மரணமும் தேவனுடைய நித்திய ஜீவ வார்த்தைகளினால் ஜெயமாக விழுங்கப் படாமல் இருக்கும் போது; அவைகள் இரண்டாம் உயிர்தெழுதலில் வெளிப்பட்டு, நியாயத்தீர்க்கப்படுவதால் மரணத்தின் பல நிலைகள் / தன்மைகள் மதிப்பிடப்பட்டு அதற்கேற்றபடியுள்ள பிரதிபலன்களை பெற்றுக் கொள்ளுகிறது. Rev_20:4-6, Rev_20:11-15, 1Co_15:35-42, 1Co_15:43-49, Mat_6:25-30,

**7-1-5 இரண்டாவது மரணம் :-**

இரண்டாம் உயிர்தெழுதலை பெற்றுக் கொண்ட ஆவி, ஆத்துமா, சரீரம், நியாயத்தீர்க்கப்பட்ட பின்பும், தொடர்ந்து மரணத்திலே நிலை கொண்டிருக்கும்போது, ஆவி, ஆத்துமா சரீரம் இரண்டாம் மரணமாகிய அக்கினி நரக நியாயத்தீர்ப்பை பெற்றுக்கொள்ளுகிறது.

**7-2-0 முதலாம் மரணத்தில் பங்கடைந்து இரண்டாம் மரணத்தை ஜெயங்கொள்ளுவது :-**

7-2-1 சரீரம், முதலாம் மரணமாகிய பாதாளத்தின் வல்லமையினால் மரணமடைந்து, ஆவி, ஆத்துமா, மட்டும் இரண்டாம் மரணமாகிய அக்கினி நரக நியாயத்தீர்ப்பை ஜெயங்கொள்ளுவது. Rev_20:4-6, Rev_20:11-15,

7-2-2 அழிவுள்ள சரீரம் கிறிஸ்துவின் விசுவாச நீதியினால் அழியாமையாகிய நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ள முடியாமல், முதலாம் மரணமாகிய பாதாளத்தின் வல்லமையினால் தேவனுடைய ரூபத்திலும் சாயலிலும் மரணமடைகிறது. இப்படி சரீரம் மட்டும் முதலாம் மரணத்தில் மரணமடைந்து, ஆவி, ஆத்துமா மட்டும்

தேவனுடைய நியாயப்பிரமாண நீதியினால் பிழைக்கிற படியால், இந்த ஆவி, ஆத்துமாவிற்கு தேவனுடைய கோபாக்கினையாகிய இரண்டாம் மரணத்தின் ஆக்கினித்தீர்ப்பு இல்லை. Rev_20:4-6, Rev_20:11-15,

7-2-3 முதலாம் மரணத்தில் மரணமடைந்த சரீரம் இரண்டாம் உயிர்தெழுதலில் பங்கடைந்து, அதன் நீதிக்கிரியைகளின் படி ஏதாவது ஒரு மிருக சாயலைப் பெற்றுக் கொண்டு நித்திய ஜீவனில், நித்தியமாக பிழைக்கிறது, இது அக்கினி நரகத்திலிருந்து இரட்சிப்பு / பொதுவான இரட்சிப்பு / பகுதி இரட்சிப்பு. Rev_20:11-15, 1Co_15:35-42, 1Co_15:43-49,Mat_6:25-30

7-2-4 இரண்டாம் மரணத்தை ஜெயங்கொள்ளுகிற நியாயப்பிரமாண நீதியினால் ஆவி, ஆத்துமாவின் இரட்சிப்பு:-

கிறிஸ்து பாவ மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைத் தீர்ப்பு செய்து பாவத்தை பலி செலுத்தினபோது, நியாயப்பிரமாண நீதி நிறைவேற்றப்படுகிறது; அப்பொழுது கிறிஸ்து மாம்சத்திலே கொலையுண்டு ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்.

கிறிஸ்து நியாயப்பிரமாண நீதியை நிறைவேற்றினது போல, தங்களுடைய பாவ மாம்சத்திலே தங்களுடைய பாவத்தை ஆக்கினைத் தீர்ப்பு செய்து பாவத்தை பலி செலுத்துகிறவர்களுக்கு / தீமையை நன்மையினால் ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு; அவர்களுடைய ஆவி, ஆத்துமா உயிர்ப்பிக்கப்பட்டு நித்திய ஜீவனை அடைந்து பிழைக்கிறது.

இப்படிப்பட்டவர்களுடைய ஆவி, ஆத்துமாக்கள் மட்டும் தேவனுக்கு முன்பாக, பிழைக்கிற படியால் இவர்களுக்கு இரண்டாம் மரணமாகிய ஆக்கினை நரக ஆக்கினைத் தீர்ப்பு இல்லை, மேலும் முதலாம் மரணத்தில் மரணமடைந்த இவர்களுடைய சரீரம் இரண்டாம் உயிர்தெழுதலில் நியாயத்தீர்க்கப்பட்டு, தங்களுடைய நீதிக் கிரியைகளுக்கேற்ப ஏதாவது ஒரு மிருக

சாயலைப்பெற்றுக்கொண்டு நித்தியமாக பிழைக்கிறார்கள். Rom_8:1-4, 1Pe_3:18, 1Co_15:35-42,

7-2-5 பாவிகளின் பிரமாணமாகிய நியாயப்பிரமாண நீதியை பின்பற்றினவர்கள் மாம்சத்திலே / சரீரத்திலே ஆக்கினைக் குள்ளாக்கப்பட்டு, தேவனுக்கு முன்பாக ஆவி, ஆத்துமாவில் பிழைக் கிறார்கள், இவர்கள் தேவனுடைய கோபாக்கினையாகிய அக்கினி நகரகத்திலிருந்து தப்புவிக்கப்படுவார்கள். Rom_2:14-15, Rom_2:25-29, 1Co_3:11-15, 1Co_5:1-5, Gal_3:10-13 .

7-2-6 நியாயப்பிரமாண நீதியைப் பின்பற்றி தங்கள் மாம்சத்திலே / சரீரத்திலே தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்பை அடைந்திருக்கிறவர்கள் ; முதலாம் உயிர்தெழுதலில் பங்கு பெற முடியாமல், தங்கள் சரீரத்தின் முதலாம் மரணமாகிய தேவனுடைய ரூபத்திலும், சாயலிலும் மரணமடைந்து, மிருக சரீரத்தின் சாயலையும் ரூபத்தையும் பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

7-2-7 முதலாம் மரணமாகிய பாதளத்தின் வல்லமைகளை ஜெயங்கொள்ள முடியாதவர்கள் இரண்டாம் உயிர்தெழுதலில் வெளிப்பட்டு, வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பின் மூலம் தங்கள் நீதிக் கிரியைகளுக்கேற்ப எதாவது மிருக சரீரத்தின் சாலையும், ரூபத்தையும் பெற்று இரண்டாம் மரணமாகிய அக்கினி நரக நியாயத் தீர்ப்பிலிருந்து விடுதலையாக்கப்படுவார்கள். 1Co_3:11-15, 1Co_5:1-5, 1Co_15:35-44, Rev_20:11-15,

7-3-0 பாவிகளின் பிரமாணமாகிய நியாயப்பிரமாண நீதியை பின்பற்றுகிறவர்களுக்கு கிறிஸ்துவின் ஜீவ அப்பங்கள் தங்களுடைய வாய்க்கு தூரமாக விலகியிருந்தாலும், அவைகளை தங்களுடைய இருதயத்திற்கு சமீபமாக வைத்துக் கொண்டிருந்து புசிக்கிறார்கள்.

தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய வாய் தூரமாக விலகியிருந்தாலும், அவைகளை தங்களுடைய இருதயத்திற்கு சமீபமாக வைத்துக் கொண்டிருந்து

புசிக்கிறவர்கள் / ஏற்றுக் கொள்ளுகிறவர்களுடைய ஆத்துமா மனுஷ நீதியில் / சுய நீதியில் பிழைக்கிறது; இவர்கள் பொதுவாக உலகத்தில் தோன்றின பெரிய மதங்களையோ அல்லது அவைகளின் உட்பிரிவுகளையோ கொண்டவர்களாக இருக்க மாட்டார்கள்.

7-3-1 தேவன் மோசேயின் மூலம் பாவிகளுக்கு கொடுத்த நியாயப்பிரமாணத்தின் அப்பங்களை தங்களுடைய வாய்க்கு தூரமாக விலகியிருந்தாலும், அவைகளை தங்களுடைய இருதயத்திற்கு சமீபமாக ஏற்றுக் கொண்டு நன்மை தீமைகளை பகுத்தறிந்து நீதியின் கிரியைகளை நிறைவேற்றுகிறபோது, அவைகளினால் தங்களுடைய ஆத்துமா மனுஷ நீதியினால் பிழைக்கிறது / சுய நீதியில் பிழைக்கிறது. Rom_3:20-21, Gal_3:10-12, Deu_32:45-47, Isa_51:7, Rom_10:5

7-3-2 தேவன் மோசேயின் மூலம் பாவிகளுக்கு கொடுத்த நியாயப் பிரமாணத்தின் நன்மை தீமைகள் புற ஜாதிகளுடைய மனசாட்சியின் மூலம் அவர்களுடைய இருதயத்திற்கு சமீபமாகயிருந்து, சாட்சியிடுகிறபடியால், அவைகளில் வெளிப்படுகிற சுய நீதியின் கிரியைகளை நிறைவேற்றுகிறபோது, அவர்களுடைய ஆத்துமா மனுஷ நீதியினால் பிழைக்கிறது / சுய நீதியில் பிழைக்கிறது Rom_2:14-16, Rom_2:27-29, Rom_7:22-25, Rom_1:19-23, Rom_10:20, Isa_65:1, Joh_9:31-41

7-3-3 தேவன் மோசேயின் மூலம் பாவிகளுக்கு கொடுத்த நியாயப் பிரமாணத்தின் வார்த்தைகளை நேரடியாகவோ, மனசாட்சியின் மூலமாகவோ பெற்றுக் கொண்டவர்களுடைய இருதயத்தில், நன்மை தீமைகள் சாட்சியிட்டு வெளிப்படுகிறபடியால் தேவனுடைய வார்த்தைகளுக்கு பஞ்சம் பெருகி வருகிற காலத்தில்; இவர்கள் பயப்படாமலும் கலங்காமலும், பல இடங்களுக்கு அலைந்து திரியாமலும் இருந்து, தங்களுடைய ஆத்துமாவில் சுய நீதியில் பிழைத்துக் கொண்டிருப்பார்கள். ஆகையால் இவர்கள் உலகத்தில் தோன்றின எந்த ஒரு மதத்தின் அடையாளத்தையோ அல்லது சுயமான அடை யாளத்தையோ தரித்துக் கொள்ள மாட்டார்கள்.

7-3-4 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய வாய் தூரமாக விலகியிருக்கிற, புற ஜாதிகள் தங்களுடைய இருதயத்திற்கு சமீபமாயிருக்கிற கர்த்தருடைய வசனங்களையும் வேத பிரமாணங்களையும் பெற்றுக் கொள்ளுவதற்காக, ஒரு யூதனுடைய நீதியின் கிரியைகளை தானும் செய்து, பத்து புற ஜாதிகள் தேவனுடைய சமூகத்திற்கு வந்து சேருவார்கள். Isa_2:1-4, Zec_8:20-23, Mic_4:1-3, Mic_4:4-7, Jer_50:4-8

7-3-5 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய வாய் தூரமாக விலகியிருந்தாலும் அவைகளை தங்களுடைய இருதயத்திற்கு சமீபமாக வைத்திருப்பவர்கள்; தங்களுடைய இருதயத்தை பாவத்திலிருந்து மனந்திரும்பி சமர்ப்பண ஊழிய அழைப்புடன் தேவானல் முன் குறிக்கப்பட்டவர்களுடன் இணைந்து தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவார்கள். Isa_2:1-4, Zec_8:20-23, Mic_4:1-3, Mic_4:4-7

7-3-6 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய வாய் தூரமாக விலகியிருந்தாலும் அவைகளை தங்களுடைய இருதயத்திற்கு சமீபமாக வைத்திருந்து புசிக்கிறவர்கள், தேவனை விசாரித்து கேளாதவர்களாக இருந்தாலும், தேவன் அவர்களுக்கு வெளிப்படுகிறார். Mat_19:12, Isa_56:3-8, Isa_56:9-12, Isa_65:1, Rom_10:20, Isa_19:19-21

7-3-7 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய இருதயம் தூரமாக விலகியிருந்தாலும் அவைகளை தங்களுடைய இருதயத்திற்கு சமீபமாக வைத்திருப்பவர்கள் ; சமர்ப்பண ஊழிய அழைப்புடன் தேவனால் முன் குறிக்கப்பட்டவர்களுக்கு பல உதவிகளை செய்து, இரத்த சாட்சியாகவும் மரிப்பார்கள். Mat_25:31-34, Mat_25:35-40, Mat_25:41-46, Joh_10:15-16, Rev_11:1-2, Rev_7:9-12,

Rev_7:13-14, Rev_7:15-17, Mat_19:12, Isa_56:1-8, Isa_56:9-12,

7-3-8 தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு தங்களுடைய வாய் சமீபமாகயிருந்து கொண்டு அவைகளை தங்களுடைய இருதயத்திற்கு தூரமாக வைத்திருக்கிறவர்கள்; ஒரு யூதனுடைய நீதியின் கிரியைகளை தானும் செய்து, தேவனுடைய வார்த்தைகளிடத்திற்கும், வேதத்தின் பிரமாணங்களுக்கும், வந்து சேராமல், முரட்டாட்டம் பண்ணி, தேவனுடைய சமூகத்தை விட்டு விலகியிருப்பார்கள். Rom_10:21, Pro_1:23-33, Jer_18:15-17, Zec_7:12-13, Isa_2:1-4, Isa_2:5-9, Isa_65:2-7, Isa_65:10-15, Hos_2:13-16, Jos_7:22-26, Jos_6:18-19

## 8-0 மனிதனுடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தின் முதலாம் உயிர்தெழுதலும், இரண்டாம் உயிர்தெழுதலும் .

8-1 முதலாம் மரணத்தையும், இரண்டாம் மரணத்தையும் ஜெயங்கொள்ளுகிற முதலாம் உயிர்தெழுதல் :-

ஆவி, ஆத்துமாவும் சரீரமும் தேவனுடைய நித்திய ஜீவ வார்த்தைகளினால் நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டு முதலாம் உயிர்தெழுதலை பெற்றுக் கொள்ளுகிறது; இந்த ஆவி, ஆத்துமா, சரீரத்திற்கு இரண்டாம் மரணமாகிய அக்கினி நரக நியாயத்தீர்ப்பு இல்லை, எனவே முதலாம் மரணமாகிய பாதாளத்தின் வல்லமையை ஜெயங்கொண்டவர்கள் இரண்டாம் மரணமாகிய அக்கினி நரகத்தையும் ஜெயங்கொள்ளுகிறார்கள், இது கிறிஸ்துவின் விசுவாச தேவ நீதியினால் கிடைக்கும் சரீர இரட்சிப்பு / விசேஷ இரட்சிப்பு / முழுமையான இரட்சிப்பு Rev_20:4-6, Rev_20:11-15,

### 8-2 இரண்டாவது உயிர்தெழுதல் :-

ஆவி, ஆத்துமாவும், சரீரமும், மரணத்திலே நிலை கொண்டிருக்கிறபடியால், இரண்டாம் உயிர்தெழுதலில் பங்கடைந்து நியாயத்தீர்ப்பினால் அவர்களுடைய நீதிக்கிரியைகள் கணக் கிடப்படுகிறது.

**8-3-0 கிறிஸ்து நியாயப்பிரமாண நீதியை நிறைவேற்று கிறார் :-**

8-3-1 சாவுள்ள ஆவி, ஆத்துமா சாவமையாகிய நித்திய ஜீவனை தரித்துக் கொள்ளும் போது ஆவி, ஆத்துமாவின் மரணம் ஜெயமாக விழுங்கப்படுகிறது. 1Co_15:56, Rom_6:23, Jam_1:13-15, Rom_5:12-13, Rom_7:7-13, Ecc_8:5-6,

8-3-2 நியாயப்பிரமாண நீதியினால் ஒருவனும் தேவனுக்கு முன்பாக நீதிமான் அல்ல, ஆனால் நியாப்பிரமாண நீதியினால் அவர்களுடைய ஆவி, ஆத்துமா, மனுஷ நீதியினால் / சுய நீதியினால் பிழைக்கிறது. Rom_3:19-20, Rom_10:1-5, Lev_18:1-5, Eze_20:25, 1Ti_1:8-11,Phi_3:9-11, Rom_4:15, Gal_3:10-13,

8-3-3 கிறிஸ்து தன்னுடைய பாவ மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைத் தீர்ப்பு செய்து / பலி செலுத்தி, நியாப்பிரமாண நீதியை நிறைவேற்றுகிற படியால் கிறிஸ்து நியாப்பிரமாணத்தின் முடிவாக இருக்கிறார். ஒருவனுடைய பாவ மாம்சத்திலே பாவத்தை ஆக்கி னைத் தீர்ப்புசெய்து / பலி செலுத்தி, பாவ மாம்ச அவயவங்களிலே நியாயப்பிரமாண நீதியைத் தரித்துக் கொள்ளும் போது ஆவி, ஆத்துமாவின் மரணம் ஜெயமாக விழுங்கப்படுகிறது. 1Co_15:54, Rom_8:2-4, Rom_12:21, Gen_4:5-8,

8-3-4 தீமையை நன்மையினால் ஜெயங்கொண்டு பாவ மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைத் தீர்ப்பு / பலி செலுத்தும் போது, ஆவி, ஆத்துமா உயிர்ப்பிக்கப்படுகிறது ; அந்த ஆவியில் போய் காவலில் உள்ள ஆவிகளுக்கு கிறிஸ்து பிரசங்கித்தார். 1Pe_3:17-20,1Pe_4:5-6,

8-3-5 தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாமல் நோவா காலத்து ஜலப்பிரளயத்தில் மரித்தவர்கள் மனுஷர் முன்பாக மாம்சத்திலே / சரீரத்திலே ஆக்கினைக் குள்ளாக்கப்பட்டிருந்தும், தேவன் முன்பாக ஆவி, ஆத்துமாவிலே பிழைக்கும் படியாக;

அவர்களுக்கும் பூமியின் தாழ்விடங்களில் / பாதாளத்தில் கிறிஸ்து இறங்கி சுவிசேஷம் பிரசங்கித்தார். 1Pe_3:17-20, 1Pe_4:5-6,

**8-4-0 நியாயப்பிரமாணம் ஒரு பள்ளி ஆசிரியர் :-**

8-4-1 கிறிஸ்துவின் விசுவாசத்தினால் வருகிற நீதிப்பிர மாணத்தை, கிறிஸ்துவின் விசுவாசத்தை பின்பற்றுகிறவர்களுக்கு அளிக்கும்படி, வேதம் எல்லாரையும் ஏகமாய் பாவத்தின் கீழ் அடைத்து போட்டு நியாயப்பிரமாணத்தின் கீழ் காவலில் வைத் திருக்கிறது. Gal_3:22-23, Rom_7:14-25,

8-4-2 நியாயப்பிரமாணத்தை கிறிஸ்து நிறைவேற்று கிறபடியால் நியாயப்பிரமாண நீதியானது, பாவத்தின் கீழ் அடைக்கப் பட்டு நியாயப்பிரமாணத்தின் கீழ் காவல் பண்ணப்பட்டிருந்த நம்மை விடுதலையாக்கி, கிறிஸ்துவின் விசுவாசத்தினால் வருகிற நீதிப்பிர மாணத்திற்கு வழி நடத்துகிற பள்ளி ஆசிரியராக இருக்கிறது. Rom_8:1-4, Rom_8:5-11, Eph_2:1-5, Gal_3:10-13, Rom_5:17-21,

8-4-3 நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவின் விசுவாசத் தினால் வருகிற நீதிப்பிரமாணத்திற்கு வழி நடத்துகிற பள்ளி ஆசிரியராக இருக்கிறது. Gal_3:24, Heb_10:1-9, Heb_9:8-12, Rom_5:12-13,

8-4-4 நியாயப்பிரமாணத்தை கிறிஸ்து நிறைவேற்றுகிற படியால், நியாயப்பிரமாண நீதியின் மூலம் கிடைக்கிற ஆவி, ஆத்துமாவின் இரட்சிப்பு; நம்மை கிறிஸ்துவின் விசுவாச நீதியினால் வருகிற தேவனுடைய ரூபமும் சாயலுமான சரீர இரட்சிப்பிற்கு வழி நடத்துகிற பள்ளி ஆசிரியராக இருந்து வழி நடத்துகிறது.

**8-5-0 நீதிப்பிரமாண நீதியினால் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் முதலாம் உயிர்தெழுதல் :-**

8-5-1 பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களில் சிலர் மனசாட் சிப் பிரமாணத்தினால் நியாயப்பிரமாணத்தையும் / மோசேயின் மூலமாக நியாயப்பிரமாணத்தையும் பெற்றுக் கொண்டார்கள்; இவர்களுக்குள்ளே மேலும் சிலர், தங்களுடைய நீதிக்கிரியைகளில்

பசிதாகம் உள்ளவர்களாக இருந்து, கிறிஸ்துவின் மூலம் வருகிற விசுவாச தேவ நீதி வெளிப்படுவதற்கு முன்னே, தங்களுடைய மனசாட்சிப் பிரமாணத்தின் மூலமாகவே, விசுவாசத்தினால் வருகிற நீதிப்பிரமாணத்தின் கிரியைகளை செய்து, விசுவாசத்தினால் நீதிமான்களாக மாறியிருக்கிறார்கள்.

8-5-2 கிறிஸ்து பாதாளத்தில் இறங்கி பிரசங்கித்தபோது, மனசாட்சியில் நியாயப்பிரமாண நீதியை பின்பற்றினவர்களுக்கு ஆவி, ஆத்துமா, அக்கினி நரகத்திலிருந்து விடுதலையாகும் பொதுவான இரட்சிப்பையும்; கிறிஸ்துவின் மூலம் வருகிற விசுவாச தேவ நீதி வெளிப்படுவதற்கு முன்னே, விசுவாச தேவ நீதியை பின்பற்றினவர்களுக்கு, ஆவி, ஆத்துமாவும், சரீரமும் இரட்சிப்படைகிற மேன்மையான முதலாம் உயிர்தெழுதலை பெற்றுக் கொள்ளுகிற விசேஷ இரட்சிப்பின் நற்செய்தியையும் கிறிஸ்து அறிவித்தார்.

8-5-3 கிறிஸ்துவின் மூலம் விசுவாச தேவ நீதிப்பிரமாணம் வெளிப்படுவதற்கு முன்னே, தங்களுடைய மனசாட்சி பிரமாணத் தின் மூலமாகவே, கிறிஸ்துவின் விசுவாச தேவ நீதியின் கிரியைகளை பின்பற்றினவர்களுடைய ஆவி, ஆத்துமாவும்,சரீரமும், இரட்சி படைந்து மேன்மையான முதலாம் உயிர்தெழுதலுக்கு தகுதி யுள்ளவர்களாக இருந்து, பாதாளத்தின் வல்லமைகளை ஜெயங் கொள்ளுகிறபடியால் ; இவர்கள் கிறிஸ்துவின் மூலம் பாதாளத்தி லிருந்து விடுதலையாக்கப்பட்டு, புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான் களின் இளைப்பாறுகிற பரதேசிக்கு வந்து சேர்ந்து, புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களின் வரிசையில் இணைக்கப்படுகிறார்கள்.

கிறிஸ்துவின் மூலம் விசுவாச தேவ நீதியைப் பெற்றுக் கொண்ட புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களும், பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களும் இணைந்து, கிறிஸ்துவின் மணவாட்டி சபையின் வரிசையில் இணைக்கப்படுகிறார்கள்.

**8-6-0 நீதிப்பிரமாணத்தை பின்பற்றுகிற சந்ததி வரும் வரை, வேதம் எல்லாரையும் ஏகமாய் மாயையின் காவலின் கீழ் வைத்திருக்கிறது :-**

8-6-1 கிறிஸ்துவின் விசுவாச நீதிப்பிரமாணத்தின் மூலம் வருகிற, சரீர மீட்பாகிய தேவனுடைய புத்திர சுவிகார மகிமையின் சுயாதீனத்தை பெற்றுக் கொள்ளுகிறவர்களுக்கு அளிக்கும் படியாக; வேதம் எல்லாரையும் ஏகமாய் பொய்யின் கீழ் அடைக்கலமாக்கி மாயையின் மறைவிடத்தின் கீழ், காவலில் வைத்திருக்கிறது. Rom_8:19-23, 2Co_5:1-10, Isa_28:14-15, Isa_5:18-25, Isa_8:5-15, Isa_7:1-9, Isa_30:27-28,

8-6-2 **நீதிப்பிரமாணம் ஒரு தலைமை ஆசிரியர் :-**

நீதிப்பிரமாணத்தை கிறிஸ்து நிறைவேற்றுகிற படியால் நீதிப்பிரமாணத்தின் நீதியானது, பொய்யின் கீழ் அடைக்கலமாக்கப் பட்டு மாயையின் மறைவிடத்தின் கீழ் காவலில் இருந்த நம்மை விடு தலையாக்கி, கிறிஸ்துவின் விசுவாசத்தினால் வருகிற சரீர மீட்பாகிய தேவனுடைய புத்திர சுவிகார மகிமையின் சுயாதீனத்தை பெற்றுக் கொள்ளுதவதற்கு வழி நடத்துகிற ஒரு தலைமை ஆசிரியராக இருக்கிறது.

8-6-3 **கிறிஸ்துவின் விசுவாச நீதிப்பிரமாணத்தை கிறிஸ்து நிறைவேற்றுகிறபடியால், கிறிஸ்து ஒரு தலைமை ஆசிரியர்.**

கிறிஸ்து நியாயப்பிரமாண நீதியை தன் சரீரத்தில் நிறை வேற்றின பின்பு, கிறிஸ்துவின் ஆவி, ஆத்துமா உயிர்ப்பிக்கப்பட்டு, கிறிஸ்துவின் விசுவாச நீதிப்பிரமாணத்தின் நீதிக்கிரியைகளை நிறை வேற்றுவதற்காக, பாதாளத்தில் / பூமியின் தாழ்விடங்களில் இறங்கி, சிறைபட்டவர்களை சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்து, உன்னதத்திற்கு ஏறினார்; கிறிஸ்துவை தலையாகப் பற்றிக்கொண்டு கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குக்குத்தக்க பூரண புருஷராக எல்லாவற்றிலும் / நீதிப்பிரமாணத்தின் விசுவாசத்திலும், கிரியைகளிலும் கிறிஸ்துவை பின்பற்றி, வளர்கிறவர்களாக இருக்கும் படி அப்படி செய்தார்.

Rom_8:2-4, 1Pe_3:18-19, 1Pe_4:5-11, Eph_4:7-16, Psa_68:18, Isa_42:6-7,

8-6-4 கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகள் இருதயத்திற்கு சமீபமாக இருக்கும்போது, அவைகள் பாதாளமாகிய இருதயத்திற்கு இறங்கி சென்று நீதிப்பிரமாணத்தை பிரசங்கிக்கிறது :-

கிறிஸ்து நியாயப்பிரமாண நீதியை தன் சரீரத்தில் நிறை வேற்றின போது, கிறிஸ்துவின் ஆவி, ஆத்துமா உயிர்ப்பிக்கப்பட்டது போல, தங்களுடைய சரீரத்தில் நியாயப்பிரமாண நீதியை நிறைவேற்றுகிறபோது, தங்களுடைய ஆவி, ஆத்துமாவில் உயிர்ப் பிக்கப்பட்டவர்கள்; கிறிஸ்துவின் நீதிப்பிரமாணத்தை நிறைவேற்று வதற்காக, தேவனுடைய வார்த்தைகளை தங்கள் இருதயத்திற்கு சமீபமாக வைத்துக் கொண்டிருந்து , கிறிஸ்துவின் ஆவி, ஆத்துமா, பாதாளத்தில் இறங்கினதுபோல தங்களுடைய ஆவி, ஆத்து மாவையும் பூமிக்குரிய பாதாளமாகிய தங்களுடைய இருதயத்தில் இறங்கச் செய்து நீதியின் பிரமாணத்தை பிரசங்கிக்கிறது. Rom_10:6-11, Deu_30:11-14, Pro_27:20, Pro_30:15-16, Hab_2:4-6,

8-6-5 கிறிஸ்து பாதாளத்தில் சிறைபட்டவர்களை விடுதலையாக்கினதுபோல, தன்னுடைய சரீர அவயவங்களை மாயைகளின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கி, அவை களை நீதிக்கு அடிமையாக மாற்றுவது :-

கிறிஸ்துவின் பிரசங்கத்தினால் பாதாளத்தில் பாவத்திற்கும், மரணத்திற்கும் சிறைபட்டிருந்தவர்களை கிறிஸ்து விடுதலையாக் கினதுபோல; தன்னுடைய ஆவி, ஆத்துமாவே தன்னுடைய இருதய மாகிய பாதாளத்தில் இறங்கிச் சென்று, பொய்யின் ஆவிகளுக்கும் மாயையின் ஆவிகளுக்கும் சிறைபட்டிருக்கிற தன்னுடைய சரீர அவயவங்களுக்கு நீதியின் பிரமாணத்தை பிரசங்கித்து, மனந்திருப்பி, அவைகளை நீதிக்கு அடிமையாக்கிக் கொள்ளுகிறார்கள். Rom_7:14-25, Rom_8:7-18, 2Co_5:1-10, 2Co_5:17-20, 1Co_15:46-54,

8-6-6 கிறிஸ்துவின் புத்திர சுவிகார மகிமையின் சுயாதினத்தை சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்கள், கிறிஸ்துவின் சரீர அவயவங்களாக மாறுகிறார்கள்:-

பொய்யின் அடைக்கலத்திலிருந்தும் மாயையின் மறைவிடத்தின் காவலிருந்தும் விடுதலையாகுகிறவர்கள், கிறிஸ்துவின் நீதிப் பிரமாணத்தினால், ஆவியின் வரங்களைப் பெற்றுக் கொண்டு, தங்களுடைய சரீர அவயவங்களை நீதிக்கு அடிமையாகும்படி ஒப்புக் கொடுக்கிறவர்கள்; கிறிஸ்துவின் புத்திர சுவிகார மகிமையின் சுயாதினத்தை சுதந்தரித்துக் கொண்டு, கிறிஸ்துவின் சரீர அவயவங்களாக மாறுகிறார்கள். 1Co_12:1-7, 1Co_12:8-12,,1Co_12:12-21, 1Co_12:22-31,Eph_4:11-13, Eph_4:21-32,

8-6-7 கிறிஸ்துவின் நீதிப்பிரமாணத்தை பின்பற்றாமல் மாயையின் மறைவிடத்திலே அடைக்கலமானவர்களுக்கு தேவனுடைய நித்திய நியாயத்தீர்ப்பு Isa_28:14-15, Isa_28:16-21, Isa_30:27-28, Isa_30:8-17, Psa_2:1-12,

8-6-8 இரண்டு புகைகிற கொள்ளிக்கட்டைகளாகிய அந்திக் கிறிஸ்துக்களும், கள்ளத்தீர்க்க தரிசிகளும், கட்டின மனோ இராஜ்ஜியமான மாயையின் மாளிகைகள் தேவனுடைய வாதைகளினால் நித்தியமாக நியாயந்தீர்க்கப்படுகிறது. Isa_7:1-9, Isa_8:5-15, Isa_30:27-28, Job_15:31-35, Eze_13:1-8, Eze_13:9-16, Eze_13:17-23, Mat_7:15-20, Mat_7:21-29, Isa_8:19-22, 1Sa_12:19-25,

# முடிவுரை

மனச் சாட்சியின் மூலம் தேவனை அறிந்தவர்கள் அவருக்கு துதி, கனம், மகிமை ஆகியவைகளை செலுத்தி ஆவியில் பிழைப்பார்கள். Rom_1:17-21, Gal_3:10-12, Eze_20:11, Rom_10:6, Lev_18:5,

மனச்சாட்சி மூலம் தேவனோடு தொடர்பு கொள்ளும் வழி முறைகளிலிருந்து திசை மாறி, தேவனுக்கு துதி, கனம், மகிமை செலுத்தாதவர்களுக்கு நியாயப்பிரமாணத்தில் சொல்லப்படட் எல்லா சாபங்களும் வந்து அவர்களுக்கு பலிக்கும். Rom_1:22-32Eph_4:17-19,

தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்ளாதவர்கள் மற்றும் தேவனுடைய சித்த்தை விட்டு வழிவிலகுகிறவர்கள் வஞ்சிக் கிற ஆவிகளுக்கும் பிசாசின் உபதேசங்களுக்கும் அடிமைப்பட்டு தேவ ஆசீர்வாதங்களை இழக்கிறார்கள். 1Ti_4:1-9, 2Ti_2:7-19,

வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைபாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களோ, நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள்.

நான் உங்கள் மேல் காவலாளரையும் வைத்து, எக்காள சத்தத்துக்குச் செவி கொடுங்கள் என்றும் சொன்னேன்; அவர்களோ, நாங்கள் கேட்கமாட்டோம் என்கிறார்கள். ஆகையால் ஜாதிகளே கேளுங்கள்; சபையே, அவர்களுக்குள் நடக்கிறதை அறிந்து கொள். பூமியே, கேள்; இந்த ஜனங்கள் என் வார்த்தைகளைக் கேளா மலிருந்து, என் நியாயப்பிரமாணத்திற்குச் செவிகொடாமல் அதை வெறுத்து விடுகிறார்கள்; அவர்கள் மேல் நான் அவர்கள் நினைவு களின் பலனாகிய தீங்கை வரப்பண்ணுவேன். Jer_6:16-19,

இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளின் மூலம் தேவனுடன் உடன்படிக்கை செய்து இரட்சிப்பை பெற்றவர்களின் மூன்று நிலைகள்.

1-0 தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்

2-0 தேடுகிறவர்கள்

3-0 மற்றவர்கள் Rom_11:7,

1-0. தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் :-

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தேவ நீதியை அடைந்திருக்கிறார்கள். 1Co_8:3, 2Co_16:9, 2Ti_2:10, 2Ti_2:19, Tit_1:3, Rom_8:28-33, Rom_9:6-30 ,Joh_6:39

2-0. தேடுகிறவர்கள் :-

தேவ நீதியை தேடுகிறவர்கள் கிழே குறிப்பிடுகிற பல காரணங்களினால் ஆவிக்குரியவைகளில் இடறி விழுந்து கொண்டிருக்கிறார்கள்.

1. தேவ நீதியைத் தேடாமல் தங்கள் சுய நீதியை நிலை நிறுத்த முயற்சி செய்தல். Mat_6:33 Rom_10:1-3,

2. நியாயப்பிரமாண நீதியின் கிரியைகளின் மூலம் நீதிப் பிரமாணத்தை தேடுவது. Rom_9:31-33,Gal_5:4-6,

3. முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடாமல், பரலோகத்தில் வாசல் கதவுகளை தொடர்ந்து தட்டிக்கொண்டிருப்பது. Luk_13:23-30,

4. தேவனுடைய சித்தத்தை செய்யாமல் தங்களது தேவைகள் சந்திக்கப்பட்ட தேவனிடம் கேட்பது. Mat_7:22-23, Isa_1:10-15,

5. முதலாவது தேவனுடைய நீதியைத்தேடாமல் தங்கள் சுய விருப்பங்களை தேடி அவைகளை அடையும் படி தேவனை நோக்கி கேட்பது. 1pe_2:6-8, Rom_9:32-33, Isa_8:11-16, Isa_28:14-15, Mat_21:44, Luk_20:18, Jer_5:1-5,

6. மூலைக்கல்லில் இடறுவதற்கு அறியாமைதான் மூலக்காரணம் ஏனென்றால் அவர்கள் தேவ அறிவை வெறுத்தார்கள். Hos_4:6, 1Sa_5:13-14, Mal_2:1-9, Jer_23:22, Mat_22:29, Mar_12:24, 1Co_8:1-2, Ecc_1:18, Ecc_12:12,

7. ஆவிக்குரிய வாழ்க்கையில் நற்கிரியைகள் இல்லாத பொழுது அறியாமையின் ஆழத்திற்கு செல்வது. Gal_5:6, Jam_2:17-26, Mat_25:24-30, Luk_19:20-27, Mat_22:9-14,

8. இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளின் உடன் படிக்கையின் மூலம் நற்கிரியைகள் செய்யும் போது அவைகள் எந்த

ஒரு மனிதனையும் எந்த சூழ்நிலையிலும் தேவ நிதியை அடைய வழி நடத்தும்.

3-0 மற்றவர்கள் :- Rom_11:8-10, Psa_69:21-28, Act_1:16-20, 1Pe_2:1, 1Pe_3:1, Jud_1:1,

சூதும் வஞ்சகமுமான தந்திரமுள்ள போதகமாகிய பல விதமான காற்றுகளைப் பின்பற்றாமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டு, தேவன் ஒவ்வொரு அவயவங்களுக்கும் பகிர்ந்து கொடுத்த விசுவாச அளவுப் பிரமாணத்தில் நிலைத்திருந்து, முழு சரீர வளர்ச்சியை ஏற்படுத்தி தேவ சித்தத்தை நிறைவேற்றுவதினால் தேவ ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ள முடியும் Eph_4:14-16,

இரு மனமாகிய சந்தேக காற்றை பின்பற்றாமல் ஒரு மனமாகயிருந்து முழு விசுவாசத்துடன் நற்கிரியைகள் செய்து தேவ ஞானத்தை சுதந்தரித்துக்கொள்ள முடியும் Jam_1:5-8, Jud_1:12,

இந்த நாள் வரைக்கும் காட்டுக் கழுதைகள் போல தங்கள் மதவெறியின் போதகத்தை பின்பற்றி தன் இச்சையாக திரிந்து கொண்டிருப்பவர்கள் தங்களுடைய ஆவி, ஆத்துமாவில், அறிவு, புத்தி, ஞானம், இவைகளைக் கொடுத்து, தங்களை வழி நடத்துகிற உன்னதமான தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்படிந்து அன்புடன் சத்தியத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். Jer_2:24, Jer_14:6, Hos_8:9, Job_39:5-8,

இந்நாள் வரைக்கும் இவர்கள் தேவ நீதிக்கு கீழ்ப்படியாமல் தங்கள் மனதை கடினப்படுத்தியிருக்கிறார்கள், இவர்கள் நியாத் தீர்ப்புக்கு தப்புவதில்லை இவர்கள் தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்படிந்து எப்பொழுது தீமை செய்வதிலிருந்து மனந்திரும்பு கிறார்களோ அப்பொழுது அவர்கள் மீண்டும் தேவனுடைய இரட்சிப்பை பெற்றுக் கொள்ள முடியும். ஆமென். Jer_2:24, Jer_14:6, Hos_8:9, Job_39:5-8.



இந்து முறைப்படி பூசாரி வம்சத்தில் பிறந்து பெற்றோர் என் சிறுவயதிலே மரணமடைந்ததால், வறுமையின் காரணமாக கோவையில் உள்ள ஒரு அநாதை இல்லத்தில் கிறிஸ்தவ முறைப்படி வளர்க்கப்பட்டு, கடந்த முப்பது வருடங்களாக தேவ வார்த்தைகளைக் கண்டு, கேட்டு, உணர்ந்துகொண்டபடியால் ; பரலோக இராஜ்ஜியத்தின் உவமைகளின் இரகசியங்களின் நன்மை தீமைகளை பகுத்தறிவதின் மூலம் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்தை புசித்து ஆவி, ஆத்துமாவில் மறுரூபடைந்தேன்.

## தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து புஸ்தகங்களின் தலைப்புகள்

**1. பாழாக்குகிற அருவருப்பு பரிசுத்த ஸ்தலத்தில் நின்று கொண்டிருக்கிறது**

**2. தேவனுடைய வீட்டிலே நியாயத்தீர்ப்பு துவங்குகிறது**

**3 தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தி**

**4. கிறிஸ்துவின் ஜீவ அப்பங்களை புசிக்கும் மூன்றுவகையான ஜனங்கள்**

**5. ஆவி,ஆத்துமாவின் மறுபிறப்பும் சரீரத்தின் உயிர்தெழுதலும்**

**6. நித்திய ஜீவ வார்த்தைகளினால் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து**

**7. தேவனுடைய வெளிப்பாடுகளின் மூல உபதேசங்கள்**

**8. தேவனுடைய வெளிப்பாடுகளின் நீதியின் உபதேசங்கள்**

**9. பூமியின் நான்கு திசைகளிலிருந்து நான்கு வகையான விசுவாசங்கள்**

**10. இந்த மனுஷகுமாரன் யார்?**

**11. ஆவிக்குரிய இஸ்ரவேலர்களின்/யூதர்களின் அடையாளங்கள்**

**12 . தேவனும் மனிதனும் கேட்ட எட்டு கேள்விகள்**

இந்த தேவனுடைய வார்த்தைகளின் தலைப்புக்களின் மூலம் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து சமைக்கப்பட்டு இந்த புஸ்தகத்தில் புசிக்க ஏற்றபடி / அவரவர் உட்கொள்ளும் அளவுக்கேற்றபடி /

தன்மைக்கேற்றபடி பரிமாறப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் தேவனுடன் விசுவாச உடன்படிக்கை செய்த அநேகர் இந்த விருந்தை புசிக்க அபாத்திராக போனார்கள். ஆனால் தேவனால் முன் குறிக்கப்பட்டவர்கள் ஒரு சிலர் இயேசு கிறிஸ்து ராஜாவாக முடிசூட்டப்படும் பட்டாபிஷேக விழாவில் கலந்து கொண்டு இந்த தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்தை பல ருசியுள்ள தேவ வார்த்தைகளின் தலைப்புகளாக புசித்து, அதன் சுவைகளை உணர்ந்து கொண்டபடியால், ஆவி, ஆத்துமாவில் மறுரூபமடைந்து, தங்களுக்கு கொடுத்த தேவ சித்தத்தை நிறைவேற்றுவதின் மூலம் ஜெயங்கொள்கிறவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துகிறார்கள்.

அவர்கள் தங்களுக்கு வைக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொண்டு பரலோக இராஜ்ஜியத்தின் ஆட்சி அதிகாரங்களை பகிர்ந்து கொடுக்கும் மணவாளனாகிய கிறிஸ்துவுடன் தேவனுடைய இராஜ்ஜியத்தில் ஆட்சி அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளுகிறார்கள்.